தொழில்

இந்த இதழில்

தலையங்கம் :

		பக்கம்
நீலகிரியில் கச்சா பிலீம் உற்பத்திசாலை நிறுவுக!	...	3
போற்றுகிறோம்!	...	3
தோள்கொடுக்கும் உத்தமர்கள்	...	5
இணைந்த உள்ளங்கள் (தொடர்கதை பற்றி)	...	6
அறிமுகம்	...	7
கவிதை: இணையிலாத இன்பம்	...	10
அத்தான் இருந்தால்	...	19
சிறுகதை :		
பழிக்குப் பழி	...	11
இலக்கியம்:		
பெண் என்றால்?...	...	23
தொழில் - கட்டுரைகள்:		
பழுப்பு நிலக்கரிக் கட்டிகள்	...	9
இரும்பு, எஃகு சாமான் மகாநாட்டு தீர்மானங்கள்	...	21
ராஜ்ய சங்க நிர்வாகக் கமிட்டி நடவடிக்கை	...	14
செக்குத் தொழிலின் கஷ்டங்கள்	...	17
ராசி பலன்	...	25
சினிமா:		
வஞ்சிக்கோட்டை வாலிபன்	...	28

உயர்ந்த ரகம், உறுதியானவை

"திண்டுக்கல்"

ஸ்டீல் டிரங், சூட்கேஸ், கேபிள் ரகங்கள், வாளிகள், விவசாயக் கருவிகள், கீல் சட்டங்கள்,
இரும்பு கிராதிகள், நெல் அவியல் டாங்குகள், தண்ணீர் டாங்குகள்,
தங்களின் ஆர்டரின் பேரில், சுத்தமாக தயாரித்து கொடுக்கிறோம்.

M. கருப்பனன்.

சென்னை அரசினர் உதவி பெற்ற

லக்ஷ்மி டிரங்க் டிப்போ

99, மெயின் ரோடு,

திண்டுக்கல்.

தொழில் பத்திரிகை கிடைக்கும் இடங்கள்

ஜூன் 15 - தேதி " தொழில் " இதழிலிருந்து தொடர் கதை முதலிய புதிய அம்சங்கள் இடம் பெறுகின்றன. சந்தாதாரகளாகப் பதிவு செய்து கொண்டால் தவறுமல் " தொழில் " கிடைத்து வரும். வாசகர்கள் கீழே கண்டுள்ள முகவரிகளில் " தொழில் " இதழ்களை ஒழுங்காகப் பெறலாம்.

சென்னை ...

"தொழில்" அலுவலகம்
55, எடப்பாளையம் தெரு,
சென்னை-3

நியூஸ் மார்ட், ...
விக்டரி ஹவுஸ்,
7/8 மவுண்ட்ரோட்
சென்னை-2

செங்கற்பட்டு ஜில்லா

N. A. L. விஸ்வநாதம் செட்டியார்,
சிக்கராயபுரம்,
குன்றத்தூர் போஸ்டு
பூந்தமல்லி மார்க்கம்

K. N. சம்மந்தம்
குலாலர் தெரு,
கண்டோன்மெண்டு
பூந்தமல்லி.

சேலம் ஜில்லா

T. M. சுப்ரமணிய ஆச்சாரி,
மணியம் இண்டஸ்ரீஸ்,
சங்கரி ரோடு,
திருச்செங்கோடு,

M. A. வஹாப்
V. O. C. மார்கெட்,
சேலம்-1.

வட ஆற்காடு ஜில்லா

மோகன முதலியார்,
ஸ்டார் டிரங் ஒர்க்ஸ்,
32, லாங்கு பஜார்,
வேலூர்.

தென் ஆற்காடு ஜில்லா

வரகூர் K. முத்துகுமாரசாமி
2, போல் நாராயணபிள்ளை
தெரு,
சிதம்பரம்

P. S. தண்டபாணி
1742, வண்டிப்பாளையம்
கூடலூர்.

திருச்சி சில்லா

ஜனுப் P. H. முகமது நஸிருதீன்,
57, பாலக்கரை ரோடு,
திருச்சி-8.

T. P. வேலு பிள்ளை
டிரங்க் பாக்ஸ் ஷாப்
திருச்சி-2

B. முகமது இஸ்மாயில்
முஸ்தபா மார்ட்,
புதுக்கோட்டை.

கோயம்புத்தூர் ஜில்லா

D. குழந்தை சாமி
13/367 மில் ரோடு
கோயம்புத்தூர்.

P. கன்னிமுத்து
கௌன்சிலர்,
பாய் மண்டி
பல்லடம் ரோடு,
திருப்பூர்.

மதுரை ஜில்லா

M. கருப்பணன்
லக்ஷிமி ஸ்டீல்டிரங்க் ஒர்க்ஸ்
99, மெயின் ரோடு,
திண்டுக்கல்

S. சூரியநாராயணன்
12, அரசமரம் பூக்காரச்சந்து,
தாளப்ப முதலி தெரு,
மதுரை.

இராமநாதபுரம் ஜில்லா

K. C. இராமசாமி
தட்டுமேட்டுத்தெரு
சிவகாசி.

ஸ்ரீ ராமகிருஷ்ணு & கோ,
விருதுநகர்

திருநெல்வேலி ஜில்லா

M. கருப்புசாமி வேளார்
32, கதிரேசன் கோயில்
தெரு,
தூத்துக்குடி.

காரியதரிசி,
வாவாங்கரம் குலால
கூட்டுறவு, உற்பத்தி
விற்பனை சங்கம்
லிமிடெட், கடகரை
P. O. தென்காசி
தாலுக்கா

வெடிகுண்டு T. S. முத்துசாமி
25, பழனித் தெரு
திருநெல்வேலி.

புது டில்லி

P. கிருஷ்ணமூர்த்தி ஐயர்
ஷாப் நெ.
28-B. கான் மார்கெட்,
நியூ டெல்லி.

C. V. பாண்டியன்,
முருகன் ஸ்டோர்ஸ்,
கங்காராம் பில்டிங்ஸ்,
ஆஜ்மல் கான்ரோடு,
கரோல் பாக்,
நியூ டெல்லி.

இலங்கை

V. S. நடேச நாயர்
241, K. K. S. ரோடு,
ஜாப்னு (Jafna)
கொழும்பு.

பாண்டிச்சேரி

M/s. P. R. & சன்ஸ்
டியூப்ளக்ஸ் ரோடு,
பாண்டிச்சேரி.

"அரும்பும் வேர்வை உதிர்த்துப் புவிமேல்
ஆயிரம் தொழில் செய்திடுவீரே!"

தொழில்

ஆசிரியர் : கே. பெருமாள் உடையார்

தொழில் 1	சென்னை, 1—6—58	இதழ் 3

நீலகிரியில் கச்சா பிலிம் உற்பத்தி சாலை நிறுவுக!

'காட்சியே கல்வி' என்பது பழமொழி. சினிமா எவ்வளவு வலிமை வாய்ந்த ஒரு சாதனம் என்பது நாடறிந்த உண்மை. மேல் நாடுகளில், நம் நாட்டிலும் கூடக் கல்வித் திட்டத்தில் சினிமா இடம்பெற்றுள்ளது. சினிமாத் தொழில் ஒரு பொழுது போக்குச் சாதனமாக விளங்குவதோடு மட்டுமின்றி, மக்களுக்கு அறிவூட்டும் ஆசானாகவும் உலகெங்கும் விளங்கி வருகிறது. சினிமா மக்களின் வாழ்க்கையில் இன்றியமையாத ஒரு அம்சமாக நம் நாட்டில் மட்டுமல்ல- உலகம் முழுவதிலுமே விளங்கி வருகிறது. அன்றாடம் சம்பாதிப்பவர்கள் கூட, ஒரு நேரத்து உணவைக் குறைத்துக்கொண்டாயினும் நல்ல படங்களைக் கண்டு களிக்கின்றனர். இவ்விதமாக மக்களின் வாழ்வுடன் ஒன்றி விட்ட சினிமாத் தொழிலுக்கு அண்மையில் நம் நாட்டில் ஏற்படவிருந்த ஒரு ஆபத்து தக்க தருணத்தில் மாநில, மத்திய அரசாங்கங்கள் விழித்துக்கொண்டமையால் தவிர்க்கப்பட்டது. நாட்டின் நல் வாழ்வுக்கான அபிவிருத்தி திட்டங்களுக்கு அவசியமான யந்திரங்கள், முதலியன இறக்குமதி செய்வதற்குத் தேவைப்படும் அந்நியச் செலாவணி முடை ஏற்பட்டுள்ள படியால் மத்திய ஆட்சியினர் இறக்குமதிகள் அனைத்தையும் குறைத்து வருகின்றனர். இவ்வித இறக்குமதிக் குறைப்பில் கச்சா பிலிமும் சிக்கிக்கொண்டது இயற்கையே. எனினும் இறக்குமதி கிட்டத்தட்ட மூன்றில் ஒரு பங்காக 'வெட்டப்பட்டது' யாரும் எதிர்பார்க்காதது. சினிமாத் தொழில் அமெரிக்காவுக்கு அடுத்தபடியாக உலகிலேயே 2-வது இடம் பெறும் அளவுக்கு இந்நாட்டில் வளர்ந்தோங்கியுள்ளது. பல லட்சக்கணக்கான மக்களுக்குப் பிழைப்பு அளித்து வருகிறது. பிலிம் இறக்குமதி வெட்டினல் தொழிலில் பெரும் நெருக்கடி ஏற்பட்டு பல்லாயிரக்கணக்கானவர்கள் வாழ்வு இழக்கும் பேராபத்து ஏற்பட்டது. படாதிபதிகளும், படத்தொழில் சம்பந்தப்பட்டவர்களும் பொதுமக்களும் படவுலகில் ஏற்பட்டுள்ள இந்நெருக்கடியை உடனடியாக ஒரு முகமாக அரசாங்கத்துக்குச் சுட்டிக் காட்டவே மத்திய ஆட்சியினர் கச்சா பிலிம் இறக்குமதிக் குறைப்பின் கடுமையைத் தளர்த்தினர். மக்கள் குரலுக்கு மறுகணமே செவிசாய்த்த மத்திய ஆட்சிக்கு நாம் நன்றி தெரிவித்துக் கொள்கிறோம். எனினும் படத் தொழிலுக்கு ஏற்பட்ட ஆபத்து தவிர்க்கப்பட்டதே ஒழிய அது அறவே நீங்கிவிடவில்லை. வழக்கமாக இந்தியா இறக்குமதி செய்து வந்த அளவில் ஐந்தில் மூன்று பங்கு (அதாவது 60 சத வீதம்) கச்சா பிலிம் இறக்குமதி செய்யத் தற்போது

போற்றுகிறோம்!

உழைப்பால் உயர்ந்த உத்தமர் நம் முதல் அமைச்சர் திரு. காமராஜ். உழைப்பாளிகளின் துன்பங்களை அவர் அறிவார். காலைக் கதிரோன் தோன்றுமுன் ...ம் தறியுள் புகுந்து மாலை வெய்யோன் மறைந்த பின்பு வெளி வரும் கைத்தறி நெசவாளர் நிலை உயர, கைத்தறித் துணிகளுக்கு மீண்டும் ரூபாய்க்கு இரண்டணா 'தள்ளுபடி' (ரிபேட்) வாங்கிக் கொடுத்த முதல் அமைச்சர் அவர்களைப் போற்றுகிறோம். இரண்டணா தள்ளுபடி நிரந்தரமாக நிலைக்க அவர் மேற்கொண்டுள்ள முயற்சிகள் முழு வெற்றி காண வாழ்த்துகிறோம்!

44848

அனுமதிக்கப்பட்டுள்ளது. வளர்ந்து வரும் சினிமாத் தொழிலின் முக்கியமான மூலப் பொருளான கச்சா பிலிம் இறக்குமதியை எவ்விதத்திலும் குறைப்பது நாட்டின் முன்னேற்றத்திற்கும், மக்களின் அறிவு வளர்ச்சிக்கும் முட்டுக்கட்டை போடுவதாகவே அமையும். எனவே முக்கியமாக அரசினரும், பொதுவாகப் படத் தொழில் பிரமுகர்களும் இத்தருணத்தில் நாட்டுக்குச் செய்யவேண்டிய நல்லகடமை ஒன்றுண்டு. அதுதான் நம் நாட்டுசினிமாத் தொழிலுக்குத் தேவைப்படும் கச்சா பிலிம் முழுவதையும் நம் நாட்டிலேயே உற்பத்தி செய்து கொள்வது.

நீலகிரி மாவட்டத்தில் கச்சா பிலிம் உற்பத்தித் தொழில் நிறுவுவதற்கான நல்ல வாய்ப்புகள் இருப்பதாக அறிகிறோம். வேண்டிய யந்திரங்களும், தொழில் நுட்ப உதவியும் அளிக்க ஜெர்மன் தேசத்து தொழில் ஸ்தாபனம் ஒன்றுதயாராக இருப்பதாகவும் டில்லியிலுள்ள மக்கள் மன்றத்தில் தெரிவிக்கப்பட்டது. மேலும் காலதாமதமின்றி பிலிம் உற்பத்தி தொழில் நிறுவப்படுவதற்கு நடவடிக்கைகள் அவசரமாக உருவாவது இன்றியமையாதது. மாநில அரசாங்கம் மத்திய அரசாங்கத்தாரிடம் வன்மையாக வற்புறுத்தி விரைவில் கச்சா பிலிம் உற்பத்தி சாலை நிறுவப்படுமாறு பார்த்துக்கொள்ள வேண்டும். மாநில அரசாங்கத்துக்கு உறுதுணையாக படாதிபதிகள் இருந்து, 'காற்றுள்ளபோதே தூற்றிக் கொள்ள' வேண்டும். படத் தொழில் சம்பந்தப்பட்டவரை பண முடைக்கு இடம் கிடையாது. 'ஆபத்து தான் அப்பால் போய் விட்டதே; பின்பு பார்த்துக் கொள்ளலாம்' என்று தென் இந்திய படத் தொழில் அதிபர்கள் பேசாதிருந்து விட்டால் 'வலிய வரும் சீதேவிக்கு வழியனுப்பு உபசாரம்' நடத்துவதாகவே ஆகும் என்று எச்சரிக்கிறோம். தென்னிந்தியப் படத் தொழிலின் மும்மூர்த்திகளாக விளங்கும் ஸ்ரீமான்கள் எஸ். எஸ். வாசன், ஏவி. மெய்யப்பச் செட்டியார், பி. நாகிரெட்டி ஆகியோர் இவ்வரிய வாய்ப்பைக் கை நழுவ விடமாட்டார்கள் என்று திடமாக நம்புகிறோம்; நழுவ விடலாகாது என்று கேட்டுக் கொள்கிறோம். அரசாங்கத்துக்கு வற்றாத வருவாய் ஊற்றாக விளங்கும் படத்தொழில் வளர்ந்தோங்க எல்லாவிதத்திலும் உதவுவது மாநில, மத்திய அரசாங்கங்களின் பொறுப்பும், கடமையுமாகும்.

எழுதி அனுப்புங்கள்!

•

வர்த்தகம், பல வேறு தொழில்கள் பற்றிய கட்டுரைகளை "தொழில்" வரவேற்கிறது. வர்த்தக சபைகள், தொழில் சங்கங்களின் கூட்டங்கள், மகாநாடுகள், தீர்மானங்கள் பற்றிய செய்திகளையும் சுருக்கமாக எழுதி அனுப்பினால் வெளியிடுவோம். முடிந்த வரையில் தமிழிலேயே செய்திகளை அனுப்புமாறு கேட்டுக் கொள்கிறோம்.

அரசியல், இலக்கியம், கலை பற்றிய கட்டுரைகளும், புகைப் படங்களும் வரவேற்கப் படுகின்றன. கவிதைகள், கதைகள், சிறு நாடகங்கள் முதலியவற்றையும் மகிழ்ச்சியுடன், "தொழில்" வெளியிடும்.

எழுதி அனுப்புங்கள்; பிரசுரிக்கிறோம்!

படித்துப் பாருங்கள்; பின்பு சொல்லுங்கள்!

தொழில்

மாதமிருமுறை

சந்தா விகிதம்

தனிப் பிரதி	0—4—0
ஆண்டு சந்தா	6—0—0
வெளி நாடு	8—0—0

JL
M211, N58 T0
N 58 • 13

★ தோள் கொடுக்கும் உத்தமர்கள் ! ★

மைசூரில் மந்திரிசபை நெருக்கடி, ஒரிஸ்ஸாவில் முதல் மந்திரி ராஜிநாமா, பஞ்சாபில் நம்பிக்கை வோட் கேட்க மந்திரி சபைக்கு கட்டளை, உத்தரப்பிரதேச சட்டசபைக் கட்சியில் பிளவு என்பன போன்ற செய்திகள்நாள் தோறும் நாள் இதழ்களில் அடிபடுகின்றன. இவை போன்ற தொல்லைகளால் மனிதருள் மாணிக்கம் பண்டித ஜவாஹர்லால் நேரு பிரதம மந்திரி பதவியிலிருந்து கூட விலகி விட நாட்டம் கொண்டார். ஆனால்நாட்டின் நல் அதிர்ஷ்டம் பமபாயிலும், தமிழ் நாட்டிலும் பல்மான மக்கள் சர்க்கார் பதவி வகித்து வருவதால் பண்டித நேரு பதவியில் நீடிக்க மீண்டும் இசைந்துள்ளார்.



கடந்த 10 ஆண்டுகளாக ஓய்வு, ஒழிச்சலின்றி அல்லும் பகலும் நாட்டுக்கு நற்பணியாற்றி வரும் நேருஜி சில வாரங்கள் குலு என்ற குளிர் வாசஸ்தலத்தில் ஓய்வு எடுத்துக்கொள்கிறார். முன்னைவிட உற்சாகத்துடனும் தெம்புடனும் நாட்டுப்பணிபுரிய நம் நேருஜிக்கு இந்த ஓய்வு இன்றியமையாதது. ஓய்வுக்குப் பின்பு புத்துணர்ச்சியுடன் திடகாத்திரராகத் திரும்பி வர அவருக்கு நல்வாழ்த்துக் கூறுகிறோம்.

நேருஜியின் நல்லாட்சிக்கு தோள் கொடுத்து உறுதுணைகளாக விளங்கும்உத்தமர்கள், சென்னை முதல் அமைச்சர் திரு காமராஜ், நிதி மந்திரி திரு சி. சுப்ரமண்யம் ஆகிய இருவரையும் தமிழ் மக்கள் சார்பில் மனப்பூர்வமாகப் பாராட்டுகிறோம்.

[படம்: சென்ற ஆண்டு நெய்வேலிக்கு நேருஜி விஜயம் செய்தபோது சென்னை அரசாங்க செய்தித் துறையினர் எடுத்தது.]

—சிசு.

இணைந்த உள்ளங்கள்

(வெளிவர இருக்கும் தொடர் கதை போகும் பாதை)

—புலவர் நா. தேவநாதன்—

தமிழ் நாட்டிலிருந்து இலங்கைக்குப் பிழைக்கச் சென்றது ஒரு குடும்பம். பல காரணங்களால் சிதறுண்டு தமிழ் நாட்டிற்குத் திரும்பியது. அண்ணனும் தம்பியும் வெவ்வேறிடத்தில்! தாயும் மகளும் வெவ்வேறிடத்தில்! தந்தையும்சுற்றமும் வெவ்வேறிடத்தில்! அடையாளம் தெரிந்து கொள்ள முடியாத அளவிற்கு வெவ்வேறிடங்களில் வெவ்வேறு நிலைகளில் உள்ளார்கள்.

மூத்த மகன் செல்வ நம்பி. செல்வநம்பி உழவர் குடும்பத்தில் வளர்ந்தான். பள்ளிப் படிப்பில் ஆர்வத்தோடு இருந்து நல்ல குறியீடுகளுடன்வெற்றி பெற்றான். உழவுத் தொழில் செய்தால் வயிற்றுக்குப் போதிய கஞ்சியில்லை என்று தொழில் தேட எண்ணினன். அந்தப்படிப்புக்குக் கிடைக்கும் தொழிலும் போதிய வருவாய்க்கு இடமளிக்காது என்பதை அறிந்தான். எப்படியாவது சமுதாயத்தில் முன்னேறி நல்ல செம்மையான வாழ்க்கையை அமைத்துக் கொள்ள வேண்டும் என்று முடிவு செய்தான்.

வறுமைக் கோலத்தோடு நள்ளிரவில் யாருக்கும் தெரியாமல் வீட்டை விட்டுப் புறப்பட்டான். பலவாறு அலைந்தான். நல்ல உடையில்லாமல் எங்கும் செல்லமுடியாது என்று எண்ணி ஒரு காரில் வைத்திருந்த உடையைத் திருடிச் சென்றான். இந்த உடையை அணிந்து கொண்டு ஒரு கல்லூரித் தலைவரைச் சந்தித்தான். இதே போன்ற உடையை அவர் அணிந்து கொண்டு வந்து எதிரில் நின்றார். செல்வநம்பி திகைத்தான்! இக்கதையில் கல்லூரித் தலைவர் ஒரு முக்கியமானவர்.

கல்லூரி வாழ்க்கையில் ஈடுபட்ட செல்வநம்பி செல்வத்தைத் தேடி அலைய நேர்ந்தது. கல்வியும் கவலையும் கடுமையான எதிரிகள்! கவலை அவன் வாழ்வை மூடிக்கொண்டிருந்தபோது ஒரு பெரிய திருட்டுக் குற்றத்திற்காளாகிறான். எவர் அவனை முதலில் கன்னத்தில் அடித்துத் துரத்தினரோ அவரே அவன் அல்லல் பட்ட நேரத்தில் உயிர் காக்க வருகிறார். ஆனால் அவன் அப்பொழுது அவர் உதவியை விரும்பவில்லை. இருப்பினும்அவர் வீட்டிலேயே வளர நேர்ந்தது. அது ஒரு புதிரான வீடு. ஒருவரைப் பற்றியும் திட்டவட்டமாகப் புரிந்து கொள்ள முடியவில்லை. அங்கே முதலாளி மனத்தின் கொள்கைக்கும், தொழிலாளி மனத்தின் கொள்கைக்கும் போராட்டம்! காதலுக்கும், கடமை உணர்ச்சிக்கும் போராட்டம்! காமத்திற்கும் அன்புக்கும் போராட்டம்! தன்னலத்திற்கும் பிறநலத்திற்கும் போராட்டம்! உண்மைக்கும், ஐயத்திற்கும் போராட்டம்! நேர்மைக்கும், சூழ்ச்சிக்கும் போராட்டம்! வெற்றி யாருக்கு?.......அடுத்த இதழ் முதல் வெளியாகும் தொடர் கதையைப் படியுங்கள்!

அறிமுகம்

("சிசு")

[இந்தப் பகுதியில் சிறு அல்லது குடிசைத்தொழில்களில் உற்பத்தி செய்யப்படும்பண்டங்கள் பற்றி நம் வாசகர்களுக்கு அறிமுகம் செய்து வைக்கிறோம். உற்பத்தியாளர்கள் கட்டணம் செலுத்தாமல் இந்த அறிமுக வாய்ப்பை பயன் படுத்திக்கொள்ளலாம். ஆனால் பண்டங்கள்மாதிரிக்கு அனுப்பப்படவேண்டுவது அவசியம். "ஆசிரியர், தொழில் (அறிமுகப்பகுதி), சென்னை," என்ற முகவரிக்கு மாதிரிகள் அனுப்பப்படுதல் வேண்டும்.]

✻

தஞ்சாவூர் உருட்டு பொம்மைகளையும், புதுச்சேரி மண் பொம்மைகளையும் விரும்பாத குழந்தைகள் உண்டா? பலவித வர்ணங்களில் கலை அழகு சொட்டும் மண் பொம்மைகளில் தான் எத்தனை வகை? நாட்டியமாடும் சிங்காரிகள், நல் வாழ்த்துக் கூறும் தெய்வங்கள், நாட்டுக் குழைத்த தலைவர்கள் அனைவரையும் கலைஞரின் கை வண்ணத்தால் நம் வீடுகளிலேயே வாங்கி வைத்து மகிழ்ச்சி யடைகிறோம்.

உயிர் பெற்று, நம்முடன் பேசுகின்றாற் போலத் தோற்றமளிக்கும் பொம்மைகள், சிலைகள், விக்ரகங்கள் செய்வதில், வர்ண ஓவியங்கள் தீட்டுவதில் திரு ஆர். டி. கிருஷ்ணமூர்த்தி கைதேர்ந்த ஒருகலைவல்லுநர். முதல் மந்திரிஸ்ரீ காமராஜ் இல்லத்தில் மாடியிலுள்ள முதல் சிலை ஸ்ரீ கிருஷ்ணமூர்த்தியின் படைப்பு. செக்கிழுத்த செம்மல் வ. உ. சிதம்பரனாரின் திருவுருவச் சிலைகள் செய்துமுதல் மந்திரியார் உள்படப் பிரமுகர்களின் பாராட்டுகள் பெற்றவர் திரு. கிருஷ்ணமூர்த்தி.

(அடுத்த பக்கம் பார்க்க)



நடிகர் சிவாஜி கணேசன் சொந்தப் படக் கம்பெனியான சிவாஜி பிலிம்ஸின் சின்னமான சிவாஜி சிலை, திரு. கிருஷ்ணமூர்த்தியின் கை வண்ணமே. புரவி மீது வாள் ஓங்கிய வண்ணம் சிவாஜி மன்னன் வீற்றிருக்கும் கம்பீரக் கர்ட்சி கண் கொள்ளாக் காட்சி!

பிலிம்டைரக்டரும், கதாசிரியரும், வசன கர்த்தாவுமான ஸ்ரீ எஸ். டி. சுந்தரம், தமிழ் எழுத்தாளர் சங்கத்துக்கு வழங்கியுள்ள பேனா மன்னர் "கல்கி"யின் மார்பளவுச் சிலையும் ஸ்ரீ கிருஷ்ணமூர்த்தி வடித்ததே. இன்னும் எவ்வளவோ பொம்மைகளும், சிலைகளும், தலைவர்களின் உருவங்களும் சமைத்த சிறந்த சிற்பி அவர்.

தமிழன் கலைத்திறனைப் பேசும் சிற்பக் கலைப் பொருட்கள் வேண்டுமானால் அவற்றைச் செய்துதர முற்றிலும் ஏற்றவர் திரு. கிருஷ்ணமூர்த்தி. அவருடன் தொடர்பு கொள்ள விரும்புபவர்கள் "தொழில்" ஆசிரியருக்கு எழுதலாம்.

சிறு தொழிலுக்கான வேலைப் பட்டறை, பயிற்சி நிலையம்

———

இந்தியாவு—ஜப்பான் ஏற்பாடு

———

இந்தியாவுக்கு வந்துள்ள ஜப்பானிய தொழில் நுட்ப சர்வே கோஷ்டிக்கும், இந்திய சர்க்காருக்கும் இடையே நடைபெற்றுள்ள பேச்சுவார்த்தைகளையடுத்து, ஹௌராவில் சிறுதொழில்களுக்கான மாதிரி வேலைப் பட்டறையொன்றையும், பயிற்சி நிலையமொன்றையும், அமைப்பது சம்பந்தமாக விரிவான திட்டமொன்று தயாரிக்கப்பட்குருக்கிறது.

மி. கே. தச்சிபானாவின் தலைமையில், சமீபத்தில் இந்தியா வந்து சேர்ந்த, ஜப்பானிய கோஷ்டி, இது விஷயமாக, இந்திய சர்க்கார், மேற்கு வங்காள சர்க்கார் அதிகாரிகளுடன் பேச்சு வார்த்தை நடத்தி வந்திருக்கிறது.

Small Profits & Quick Returns

No order is too small or too great for us

QUALITY, QUANTITY GUARANTEED
MOFFUSSIL ORDERS PROMPTLY EXECUTED
A TRIAL WILL CONVINCE YOU

Manufacturers & Merchants of
Burmah Teakwood barrels & Tubs.

Suppliers to Govt. of Madras, Corporation of Madras,
Municipalities and Local Boards.

Please contact:

V. DORAIKANNU & CO.,

Sole Prop: M. VENKATESAM CHETTIAR,

35, Wall Tax Road, Madras-3.

பழுப்பு நிலக்கரியிலிருந்து கரிக்கட்டிகள்

பரிசோதனை வேலை ஆரம்பம்: நிதிமந்திரி துவக்கிவைத்தார்

பழுப்பு நிலக்கரியிலிருந்து கரிக் கட்டிகளையும், கரியையும் தயாரிப்பதற்கான முன்னேட்டப் பரிசோதனைத் திட்டத்தை சென்னை ராஜ்ய நிதி மந்திரி, ஸ்ரீ ஸி. சுப்ரமணியம் மே 14ல் நெய்வேலியில் ஆரம்பித்துவைத்தார்.

இந்த முன்னேட்டப் பரிசோதனைகள், நெய்வேலியில் கிடைக்கும் பழுப்பு நிலக்கரியிலிருந்து மிகச் சிறந்த ரகக் கரிக்கட்டிகளைத் தயாரிப்பதற்கு, அது எந்த அளவுக்கு ஏற்றது என்பதைத் தீர்மானித்தறிவதற்காகவே மேற்கொள்ளப்படுகின்றன. இப்பரிசோதனை வேலைகள் மூன்று அல்லது நான்கு மாத காலத்தில் பூர்த்தியடைந்துவிடும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. இப்பரிசோதனைகளில் கிடைக்கும் பலன்களை அடிப்படையாகக் கொண்டு, வர்த்தக ரீதியில் கரிக்கட்டியும், கரியும் தயாரிப்பதற்கான யந்திர சாதனங்களின் வரையறைகள் இறுதியாகத் தயாரிக்கப்படும்; இவ்வருஷக் கடைசிக்குள் யந்திர சாதனங்களின் சப்ளை, நிர்மானம் ஆகிவைகளுக்கான டெண்டர்கள் கோரப்படும்.

நெய்வேலி பழுப்பு நிலக்கரி சுரங்கத்துக்கு அமெரிக்க சர்க்கார் நன்கொடையாக வழங்கியுள்ள கரிப்பாளங்கள் தயாரிக்கும் யந்திரம். அமெரிக்க இன்ஜினீயர் ஜி ஜான் பிரண்டர்காஸ்ட் ஆறே வாரத்தில் இந்த யந்திரத்தை நிறுவினர் என்பது குறிப்பிடத்தக்கது. படத்தில் அமெரிக்க இன்ஜினீயரையும், தொழில் நுட்ப இந்தியச் சிப்பந்திகளையும் காணலாம்.

இணையிலாத இன்பம்

(வரகூர், சங்கீதபூஷணம், க. முத்துக்குமாரசாமி)

இராகம் : கேதாரகௌள தாளம் : ஏகம்

பல்லவி

இணையிலாத இன்பம் இன்பம்
ஈசனடியில் காணும் இன்பம் (இணையிலாத)

அனுபல்லவி

அனைவுளாருக் காகு மின்பம்
அண்டரும்பெறற் கரிய இன்பம் (இணையிலாத)

சரணம்

ஓதவியலா தோங்கு மின்பம்
உண்மைஞானம் ஒளிரு மின்பம்
பேதம கற்றிப் பேணு மின்பம்
பிறவியொழிந்த பேரின்பம் (இணையிலாத)

1957 மே மாதத்தில் தான் நெய்வேலித் திட்டத்தின் அடிப்படைத் திட்டமான சுரங்கப் பகுதியைப் பிரதம மந்திரி ஆரம்பித்துவைத்தார். இத்திட்டத்தின் நடவடிக்கை குறிப்பிட்டக் கால அட்டவணைப்படி நடைபெற்று வருகிறது. 1961 ஆரம்பவாக்கில் முறைப்படி பழுப்பு நிலக்கரியைத் தோண்டி எடுக்க ஆரம்பிப்பதற்கு முன்னர், மொத்தம் 270 லட்சம் கன கஜம் மண்ணை வெட்டி அப்புறப்படுத்த வேண்டியிருந்தது; அதில் சென்ற ஏப்ரல் கடைசி வரையில் 36 லட்சம் கன கஜம் மண் சாதாரண மண் அகற்றும் சாதனங்களைக் கொண்டே வெட்டி அப்புறப்படுத்தப்பட்டிருக்கிறது. விசேஷ சுரங்க யந்திர சாதனங்களில் ஒரு பகுதி ஏற்கெனவே வந்து சேர்ந்து விட்டது. வேறு சில பகுதிகள் இப்போது இந்தியாவுக்கு வந்து கொண்டிருக்கின்றன. அவை அடுத்த வருஷ ஆரம்பவாக்கில் வேலை செய்யத் துவங்கும். இத்திட்டத்துக்குத் தேவையான சுரங்கம் வெட்டும் விசேஷ ரக யந்திர சாதனங்களுக்கும் சமீபத்தில் ஆர்டர்கள் கொடுக்கப்பட்டுள்ளன; அவை சீக்கிரமே வந்துவிடும். நீர் ஊற்றைக் கட்டுப்படுத்துவதற்கான குழாய்க் கிணறுகளை அமைப்பதற்கு எந்த முறை சிறந்தது என்பதைத் தீர்மானித்தறிவதற்காகச் சமீபத்தில் நடத்தப்பட்ட முதல்கட்டப் பரிசோதனை வேலைகள் பூர்த்தி யடைந்துவிட்டன; அவை சிறந்த பலனளித்துள்ளன.

மின்சார உற்பத்திப் பகுதிக்குத் தேவையான யந்திர சாதனங்கள் பற்றிய விவரமான அறிக்கையொன்றை "டெக்னோ எக்ஸ்பொர்ட்" என்னும் ரஷ்ய ஸ்தாபனம் தயாரித்து வருகிறது; அந்த அறிக்கை செப்டெம்பர் மாதத்தில் இந்திய சர்க்காருக்குக் கிடைத்தும்விடும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

மின்சார உற்பத்தி யந்திர சாதனங்களுக்கு இவ்வருஷக் கடைசியில் ஆர்டர்கள் கொடுக்கப்படும்; இதற்கு வேண்டிய நிதியுதவியை ரஷ்யா கடனாகக் கொடுக்கும். ரசாயன உரத் தொழிற்சாலைக்குத் தேவையான யந்திர சாதனங்களின் சப்ளைக்கும் உலகம் முழுவதிலுமிருந்தும் டெண்டர்கள் கோரி அறிக்கைகள் இம்மாத ஆரம்பத்தில் வெளியிடப் பட்டுள்ளன.

கன வேலை யந்திர சாதனங்கள், போக்குவரத்து ஏற்பாடுகள் ஆகியவை சம்பந்தமான பட்டறைகள், ஸ்டோர்ஸ் கொட்டடிகள் ஆகியவற்றின் நிர்மான வேலைகள் பூர்த்தியடைந்துவிட்டன. இது வரையில் இரண்டு ஷிப்ட் வேலை செய்துவந்த மண் அகற்றும் யந்திர சாதனங்கள், இப்போது மூன்றுஷிப்ட் வேலை ஆரம்பித்துள்ளன. நகர்ப்புற நிர்மான வேலை முன்னேறி வருகிறது. பொதுவில் திட்ட நிறைவேற்ற வேகம் மிகவும் துரிதமடைந்திருக்கிறது.

பழிக்குப் பழி

"சிசு"

''காயமே இது பொய்யடா-சீவன்
காற்றடைத்த பையடா - மாயனூர்
குயவன் தந்த மண்ணுப் பாண்டம்
ஓடடா! - காயமே வெறும் பொய்
[யடா!''

என்ற பாட்டு வெண்கலக் குரலில் கணீர் என்று காற்றைக் கிழித்துக்கொண்டு ஓடும் 'போட் மெயிலினுள் ஒலித்தது. அவள்கையிலிருந்த ஜாலராக் கட்டை ''கடகட'' எனப் பாட்டுடன் போட்டி போட்டுக்கொண்டு கமகம் கொடுத்து ரயில் வண்டியில் பிரயாணம் செய்து கொண்டிருந்தவர்கள் அனைவரது கவனமும் அவளது பாட்டில் லயித்திருந்தது. ஆம்! அவள் ஒரு ரயில் பிச்சைக்காரி தான்! இதற்குமுன் இது மாதிரி எத்தனையோ சிறுவர்களையும் சிறுமிகளையும் பார்த்திருக்கிறேன்; பிச்சையும் கொடுத்திருக்கிறேன். ஆனால் இதுமாதிரிச் சொற்பிழையின்றி யாரும் பாடுவதையோ, அவர்கள் வெண்கலக் குரல் 'கிண்கிணி' செய்வதையோ கேட்டதில்லை.

அவளுக்கு வயது 20 இருக்கும்; அவள் ஓர் குருடி தான். அவளணிந்திருந்த ஆடையில் ஆயிரம் கண்கள்; அவை அவளது இளமையையம், தரித்திரத்தையும் வெளி உலகுக்குப் பறை சாற்றிக் கொண்டிருந்தன. அவள் அழகிதான்! சேற்றில் முளைத்த செந்தாமரை மாதிரி! அவளுக்கு வழிகாட்டிச் சென்றது ஒரு மூன்று வயதுச் 'சிறுவன்'-இல்லை, குழந்தை! அவனுக்கு வழிகாட்டவே ஒரு ஆள் வேண்டும்; ஆனால் அவன் 'தலை எழுத்து' அவனை அவளுக்கு வழிகாட்டச் செய்து விட்டது சிறுவன் யாரோ?......

பாட்டு நடந்து கொண்டேயிருந்தது. சிறுவன் ஒவ்வொருக்காக 'சலாம்' செய்து 'தர்மம்' கேட்டுக்கொண்டிருந்தான்.

என்னிடம் வந்தான். எனக்கு போடவும் மனசில்லை; போடாமலிருக்கவும் மனச்சாட்சி இடம் கொடுக்கவில்லை. ஆனால் எனக்கு எதிர்த்த 'சீட்டிலிருந்த நாரீமணியோ ''மெலோடியஸ். என்ன மிஸிஸ் சுவாமிநாதன்? அவள் எப்படிப் பாடுகிறாள் பார்த்தீர்களா? எக்ஸ்ட்டிரனரி'' என்று தன் தோழியிடம் சொல்லிக்கொண்டு ஒரு காலணா தர்மம் போடும் பொழுது 'வெள்ளையும் சொள்ளையுமாக' இருக்கும் நான் ஏதாவது போடாமலிருக்க முடியுமா? நாரீமணியைப் பார்த்துக் கொண்டே ''அடேடே! ஒரு ரூபாய்க்குத் துட்டு இருக்காடா?'' என்றேன். சிறுவன் ஏற இறங்க விழித்தான். என் எதிரிலிருந்த நாரீமணிகள், ஜட்கா வண்டிச் சக்கரத்தில் அகப்பட்ட சாட்டைக்குச்சி போல் 'கடகட' வெனப் பேய்ச் சிரிப்புச் சிரித்தனர். வெறுப்புடன் அவர்களைப் பார்த்துக் கொண்டே 'மணிப்பர்ஸைத்' துளாவித் துளாவி என் கௌரவம் நிலை நாட்டப் பட வேண்டியதை உத்தேசித்து ஒரு நாலணா நாணயத்தைப் பையன் கையில் வீசியெறிந்து ''போடாப்பா, போ! கொடுத்தால் ஒரு வேளை சாப்பாட்டுக்காவது கொடுக்க வேண்டாமா'' என்று சொல்லிக்கொண்டே நாரீமணிமளை ஏறிட்டு அலட்சியச் சிரிப்பு ஒன்றை வீசியெறிந்தேன் அவர்கள் முகத்தில் ஈயாடவில்லை!

பிச்சைக்காரியை ஒவ்வொரு சீட்டுக்குமாகச் சிறுவன் இட்டுச் சென்றான் அந்தவண்டியில்கிடைத்தது எல்லாம் சேர்த்து ஒரு ஐந்தணா வேண்டுமானால் இருக்கும். அதில் நம்ம தர்மம் 'நாலணா'! ஆனால் இன்னும் யாராவது கொடுப்பார்கள் என்றஆசையோஎன்னவோ? அவள் வாய் 'காற்றடைத்த பையடா-மண்ணு பர்ண்டம் ஓடடா' என்று தேத் தண்ணிக் கடையிலுள்ள கீறல் விழுந்த கிராம்போன் பிளேட்டு மாதிரி இடைவிடாது ஒலித்துக் கொண்டிருந்தது; அது இனிமையாய் தான் இருந்தது.

திடீரெனச் சிறுவன் அவள் கையைப் பிடித்து அழுத்தினான். அவ்வளவுதான் ஓடிக்கொண்டிருந்த ஜட்காவண்டி 'சடக்' என நின்றதுபோல அவள் பாட்டு நின்றது. அவள் எண்சாண் உடம்பும் ஒரு சாணாகக் குறுகியது. பாவம்! முகத்தில் பயபீதி படர்ந்தது. சிறுவனை மடியில் புதைத்துக் கொண்டு இரு பெஞ்சுகளுக்குமிடையே கீழே உட்கார்ந்து கொண்டாள். ரயிலில் பெஞ்சுகள் காலியாய்த் தானிருந்தன. ஆனால் சமூகஏணியின் கீழ்ப்படியில் நின்று 'டிக்கட்டும்' இல்லாமலும் பிரயாணம் செய்யும் அவள் உட்கார அந்த எஸ். ஐ. ஆர். சங்கப் பலகை இடம் கொடாது போலும்.' அவள் பேயைக் கண்டதுபோல் பயப் பட்டதற்குக் காரணம், முதலில்

தெரியாவிட்டாலும் பின்னல் தெரிந்துவிட்டது. ரயில்வேக் கம்பெனியையே தான்தாங்குவதாக நினைத்துக் கொண்டிருக்கும்பிராணி - அதுதான் 'டிக்கட் எக்ஸாமினர் '(டிக்கட் பரிசோதகர்) வந்தது தான்! உடலைக் கூட அசைக்க முடியாத அந்தப் பிரமமாண்டமான பிராணி ஒவ்வொருவரது டிக்கட்டையும் வாங்கி முன்னும் பின்னும் பார்த்து ஏதோ ஒதுக்கிக் கொண்டு வருவது எல்லோருக்கும் தெரிந்ததுதானே!

அந்தப்பூதம் பிச்சைக்காரியையும் கண்டுவிட்டது. அவள் அரவணைப்பில் அப்பிக் கொண்டு பயத்தால் விழித்துக் கொண்டிருந்த அந்தப் பச்சிளங்குழந்தையை அப்படியே காதைப் பிடித்துத் தலைக்கு மேலே தூக்கிக் கொண்டு, "ஏண்டாலே தேவடியா மவனே, ஒங்கப்பன் வீட்டு வண்டிண்ணுடா ஏறினே? அன்னைக்கே இந்தப்பக்கம்வாராதே!வந்தேன்னு எலும்பு நொறுங்கிப் போகும்ணு சொன்னேனே கேட்டாயாடா! ராஸ்கோல் என்று சொல்லிக்கொண்டே 'பளார்' 'பளார்' எனக் கன்னத்தில் அறைந்தது அந்த மனிதப் பிசாசு. 'ஓ'வெனக் கீச்சிட்டான் சிறுவன். வாயிலிருந்து மளமளவென ரத்தம் வடிந்தது. வண்டியிலிருந்த அனைவரும் மண்ணுங் கட்டியாயிருந்தோம். ஐயோ குழந்தை அடிபட்ட சத்தத்தையும் அது வீறிட்டதையும் கேட்டு அவள் முகம் போன போக்கை எழுத முடியுமா? தட்டுத் தடுமாறி வண்டியோடு ஒட்டிய வண்ணம் எழுந்து நின்ருள் அவள். நீ நாசமாப்போக, கண்ணு தெரியாதோ; கண்ணு? அடி 'சிறுக்கி' ஏண்டி, வண்டிலே ஏறமட்டும் கண்ணு தெரிஞ்சுதோ? ராஸ்கோல்;...என்று அவளையும் கன்னத்தில் அறைந்தான் அந்தக் குண்டோதர மனிதப்பிண்டம்: கோரக் காட்சி: சகிக்க முடியவில்லை. அவள் கையிலிருந்த ஜால ராக் கட்டை ஜன்னலுக்கு வெளியே பறந்தது!

துணிச்சலை வரவழைத்துக் கொண்டு, "ஏன் ஸார். பாவம்! ஏழை எளிசுகள், அடுத்த ஸ்டேஷன்லே இறக்கி விட்டுடங்களேன்" என்றேன்.

என்னை ஏற இறங்கப் பார்த்தான் நெற்றியில் பெருமாள் கோயில் சுவற்றில் பட்டை தீட்டியமாதிரி நாமம் போட்டிருந்த அந்தப்பாவி.

"போங்க சார். இதுகளாலே நமக்கு என்ன நியூசன்ஸ் தெரியுமா? ஐயோ பாவம் ஒரு நாளைக்குப் பொளச்சுட்டுப் போகுதுங் கண்ணு விட்டா இதே தானு தொழிலு?" என்று பிச்சைக் காரியைப் பிடரியைப்பிடித்து வாசலண்டை தள்ளினன். வாசலண்டை இருந்த கதவில் போய் மோதி நின்ருள் பிச்சைக்காரி.

"இரு ஒன்னைச் சொல்லுறேன். அடுத்த ஸ்டேஷன் வரட்டும் பாரு" என்று சொல்லிக் கொண்டே டிக்கட் எக்ஸாமினர் எங்கள் வண்டியை விட்டு அடுத்த வண்டிக்கு ஓடும் ரயிலிலேயே தாண்டிச் சென்ருன்.

சிறுவன் வெட்டப்பட இருக்கும் செம்மறிக் கன்று போல அவளைப் போய் அணைத்துக் கட்டிக் கொண்டான். பாவம்! திக்கற்ற இரு ஜீவன்களும் பட்ட பாடு என் மனத்தில் ஓர் வடுவை ஏற்படுத்தியது. அவள் கண்களிலிருந்து நீர் மளமளவென்று வடிந்து கொண்டிருந்தது.

நான் சிந்தனையிலாழ்ந்தேன். பக்கத்திலிருந்தவரின் 'தம்பம்பட்டி சுருட்டு' புகை மந்தமாகப் புகைந்து சுழன்று சென்று கொண்டேயிருப்பதைப் போல எனது எண்ணங்கள் சுழன்றுகொண்டேயிருந்தன.

'பாவி, எப்படி அடித்தான்! இவனும் மனிதன் தானு? பொண்டு பிள்ளைகளுடன் பிறந்தவன் எவனுவது இப்படிச் சண்டாளச் செயல் புரிவானு? இந்த நள்ளிரவில் அவளைத் திக்குத் தெயாத ஸ்டேஷனில் இறக்கி விட்டால் பாவம், குருடி அவள் குழந்தையுடன் என்ன செய்வாள்?" என்றிவ்வாறு யோசித்துக் கொண்டே யிருக்கையில் ரயில் ஒரு உலுக்கு உலுக்கிக் கீச்சிட்டு திடீரென்று நின்றது. அது உலுக்கிய உலுக்கில் நாரீமணி வந்து என்மேல் மோதி விட்டு, "ஸார், எக்ஸ்க்யூஸ் மி" என்ருள். அவள் முகத்தில் அசடு வழிந்தது!

எனக்கு ரயில் நின்றதின் காரணம் தெரிவதிலேயே ஆசை. என்னவென்று பார்க்க ஜன்னல்பக்கம் போனேன். கடைசி வண்டியிலிருந்து கார்டு கையில் விளக்கைத் தூக்கிக் கொண்டு 'லொக்கு லொக்கு' என்று எங்களை நோக்கி ஓடிவந்தார். ஆ! என்ன கோரம்! டிக்கட்பரிசோதகன் ரயிலில் அறைபட்டு சின்ன பின்னமாகக் கிடந்தான். இதற்குள்ளாகக் கூட்டம் கூடி விட்டது. சிதைந்துபோய் ரத்த வெள்ளத்தில் மிதந்த அந்தச் சதைப் பிண்டத்தை சிலர் தூக்கிக் கொண்டு போனர்கள். ரயில் அரைமணி நேரத்திற்குள்ளாக "ஊ" என்று 'மரணச்

சங்கு' ஊதிக்கொண்டே புறப்பட்டது. சுவர்க் கோழியும், தவளைகளும் அதற்குப் பின்னணி கீதமிசைத்தன.

ரயிலில் இருந்த ஜனங்கள் எல்லாம் இச் சம்பவம் பற்றியே பேசினார்கள். பிச்சைக்காரிக்கு யாரோ அடிபட்டார்கள் என்ற விவரம் மட்டும் தெரியுமேயன்றி அடிபட்டது யார் என்பது தெரியவில்லை; காரணம் அவள் குருடி.

நான் ஆரம்பித்தேன். சண்டாளப் பயல், அந்த நாதியில்லாத பொண்ணையும் பிள்ளையையும் அடிச்சதினாலே தெய்வமே அந்த டிக்கட்காரனைப் பழிவாங்கிவிட்டது. என்ன அநியாயம்...என்று கூறி முடிப்பதற்குள் பிச்சைக்காரி 'ஓ' என ஓலமிட்டாள்.

"சாமி, என்ன சாமி, டிக்கட்காரர் அடிபட்டுட்டரா? ஐயோ, கடவுளே" எனத் தலையிலடித்துக் கொண்டாள்.

வண்டியில் இருந்தவர் அனைவரும் நான் சொல்வதை ஆமோதித்தனர்.

அவள் கண்களில் நீர் மளமளவென வடியத் தன் பரிதாபகரமான கதையைச் சொன்னாள்.

டிக்கட் பரிசோதகன் அவளைத் தன் இச்சைக்கும் பயன்படுத்தியதாகவும், பிறகு ஒரு குழந்தை பிறந்தவுடன் தன்னை விட்டு ஓடிப்போகும் படியாகவும் திட்டி அனுப்பினான் என்றும், ஆனால் அவள் எங்கும் போகாமலே அந்த ரயிலிலேயே தன் குழந்தையுடன் ஜீவனம் நடத்தியதாகவும் அவனுக்குப் பிறந்தவன் தான் தன்னுடன் இருக்கும் சிறுவன் என்பதும் தான் அவள் கதையின் சுருக்கம். சின்னப் பயல் அழுகையை நிறுத்திவிட்டுத் தன் அன்னையின் முகத்தையே கூர்ந்து பார்த்துக் கொண்டிருந்தான்.

"காயமே இது பொய்யடா" என்று முணுமுணுத்தது என் மனம்: மரக்கட்டை ரயில் வண்டி தண்டவாளத்தில் ஓடிக்கொண்டிருந்தது. 'டக டக டக டக" என்ற தாளத்துடன்.

MANIYAM INDUSTRIAL & ENGINEERING WORKS,

Government Approved Fabricator & Contractor,

(Regd. No. S. 5.)

A. C. C. CEMENT STOCKIST

32, Sankari Road, Trinchengode, (Salem Dt.)

(சென்னை அரசினர் உதவி பெற்றது)

உயர்ந்த ரகம், உறுதி வாய்ந்த சகல இரும்பு பெட்டிகள், கேஷ் பாக்ஸ், வாளிகள், பனைவெல்லக் கொப்பரைகள், குடம், தண்ணீர் டாங்குகள் முதலிய பொருள்களும், விவசாயக்கருவிகளும், கட்டிட சாமான்களும், சகல விதமான லேத்து வேலைகளும், வெல்டிங்கும் செய்து கொடுக்கப்படும்.

T. M. சுப்ரமணிய ஆச்சாரி.

144848

இரும்பு எஃகு கன்ட்ரோலை எடுக்க சிபார்சு

திருச்சியில் இராஜ்ய சங்கத்தின் நிர்வாகக் கமிட்டி நடவடிக்கை

சென்னை அடிஷனல் டைரக்டர் அவர்களால், ஸ்டாக்கிஸ்டுகளிடம் உள்ள "எக்ஸ்பையர்" சரக்குகளின் விபரம் அடங்கிய சர்க்குலர்கள், ராஜ்யகங்களுக்கும் ஜில்லாசங்சங்கங்களுக்கும், அனுப்பப்படுவதால், விநியோகிப்பதில் கால தாமதம் ஏற்படுகிறது. மேற்படி சர்க்குலரை சென்னை ராஜ்ய அயரன் அண்டுஸ்டீல் பேப்ரிகேட்டர்கள் சங்கத்திற்கு மட்டும் அனுப்பித்தர வேண்டுமென்று சென்னை அடிஷனல் D. I. C. அவர்களை கமிட்டி கேட்டுக் கொள்கிறது.

"எக்ஸ்பையர்" சரக்குகளுக்கு அறிவிப்பின் பேரில் மெம்பர்களிடமிருந்து வரும் கோரிக்கைகளை, ஐந்துபேர்கள் அடங்கிய ஒரு "சப் கமிட்டி" அமைப்பதென்றும், அக்கமிட்டி தேவைகளைக் குறித்து வரும் சரக்கு விண்ணப்பங்களை பரிசீலித்து சரகது பங்கீடு செய்து, அடிஷனல் டைரக்டர் அவர்களுக்கு பர்மிட் வழங்க, சிபார்சு செய்வதென்றும் தீர்மானித்திருக்கிறது. இக்கமிட்டி சிபார்சு செய்யும் பேப்ரிகேட்டர்களுக்கு, கட்டாயம் பர்மிட் அளிக்கஅடிஷனல் D. I. C. அவர்களை கேட்டுக்கொள்கிறது.

சப்கமிட்டி மெம்பர்கள்

தலைவர் கே. பெருமாள் உடையார். ஜனாப். P. H. முகமது நசுருதின், பொதுக்காரியதரிசி, கும்பகோணம் A. முகமதுஇப்ருஹிம். சென்னை M. பார்த்தசாரதி, பொள்ளாச்சி K. P. பரசுராமன் ஆகியவர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

17-5-58 தேதி முடிய வந்த விண்ணப்பதாரர்களை அங்கத்தினராக ஒப்புக் கொள்ளப்பட்டது.

P. H. முகமது நசுருதீன்

திருச்சி இந்தியன் பாங்கு லிமிடெட்டில் சங்கத்தின் பெயரால் கரண்ட் அகவுண்ட் வைக்கவேண்டும் என்றும் பணம் வாங்குவதற்கு பொதுக்காரியதரிசி P. H. முகமது நஸிருத்தீன் அவர்களும், சங்க பொக்கிஷதார் T. M. சுப்ரமணிய ஆச்சாரியார் அவர்களும் செக்கில் கையெழுத்து செய்து பணம்வாங்கி கொள்வது என்று அதிகாரம் கொடுக்கிறது என்று தீர்மானித்தது.

அயர்ன் அண்டு ஸ்டீல் பேப்ரிகேட்டர்களுக்கு ஒரு குவார்ட்டருக்கு குறைந்தது 5 டன்னேனும், கோட்டாவிர் னயம்செய்யவேண்டுமென்று பலமுறை கேட்டுக்கொண்டும் பலகாரணங்களை காட்டி Addl. D. I. C. அவர்கள் ஏற்றுக்கொள்ளாமல், இருப்பவற்கு இக் கூட்டம்வருந்துகிறது. "அப்ரூவ்டு" பேப்ரிகேட்டர்களுக்கு டன் உயர்த்தி கொடுக்க படாமல்இருக்கும் சமயம், புதிய பேப்ரிகேட்டர்களை ஏற்படுத்தி, சரகுகள்அதிகமாக கொடுப்பதை இக் கூட்டம் Addl D. I. C. அவர்களின் கவனத்திற்கு கொண்டு வருகிறது. ஆகவே இந்த முரண்பட்ட போக்கை நிறுத்தும் முறையில், அயரன் & ஸ்டீல் கண்ட்ரோல் உத்திரவை ரத்து செய்ய வேண்டுமென, ராஜ்ய சர்க்காரை கேட்டுக்கொள்கிறது.

சங்கத்தின் சார்பில் அனுப்பப்படும் அலாட்மெண்ட் சர்குலர்கள் வந்த பிறகு, சர்குலரில் கண்டுள்ள சரக்குகளை சங்க அங்கத்தினர்கள் தனியாக கேட்கக் கூடாது என்று இக்கமிட்டி மிக கண்யமாக அங்கத்தினர்களை கேட்டுக்கொள்கிறது.

புதிய விற்பனைவரி சட்ட சம்பந்தமாக பரிசீலிக்கும் செலக்ட் கமிட்டிக்குசங்க சார்பில் மகஜர் கொடுக்கவேண்டுமென இக் கூட்டம் கேட்டுக் கொள்ளுகிறது.

காரியதரிசி வந்தனோபசாரத்துடன் கூட்டம் இனிது முடிந்தது.

*

செவிடர்களுக்கான கேள்வி சாதனங்கள்

சூரிய சக்தியால் இயங்கும்

சூரியனிலிருந்து கிடைக்கும் சக்தியைக் கொண்டு இயங்கும் செவிடர்களுக்கான கேள்வி சாதனம் ஒன்றை உலகிலேயே முதன் முதலாகத் தான் தயாரிப்பதாக மின்னசோட்டா மாகாணத்திலுள்ள சபர்மன் கோல்டன் வேல்லியைச் சேர்ந்த தால்பெர்க் கம்பெனி அறிவித்துள்ளது. கண் கண்ணாடியின் பிரேமில் பொட்டுக்கு அருகில் இச் சாதனம் அமைந்துள்ளது. வெளித் தோற்றமாகப் பொருத்தப்பட்டுள்ள செலனியம் என்ற உலோகத்தின் துணுக்குகள் மூலம் தான் இச் சாதனம் இயங்கப்படுகிறது. இவ்வுலோகம் சூரிய ஒளியை மின் விசையாக மாற்றும் தன்மைஉடையது. விஞ்ஞான கொள்கையளவில் இச் சாதனம் கால வரையின்றி சதா காலமும் உபயோகப்படக்கூடியது என கருதப்படுவதாகவும் இனி எல்லாக் கேள்வி சாதனங்களுமே இதுபோல் இயக்கச் சக்தி பெறுபவையாக இருக்குமென்றும் கம்பெனி அதிகாரிகள் கூறியுள்ளனர்.

*

தொழிலாளர் படிக்கக் கம்பெனியின் உதவி

சிக்காகோ: ஸ்டான்டர்ட் ஆயில் கம்பெனி அமெரிக்காவிலுள்ள மிகப் பெரிய தொழிற் கம்பெனிகளுள் ஒன்று. ஓய்வு நேரத்தில் பள்ளிக்கூடங்களுக்குப் போகும் தொழிலாளருக்கு அது உதவி அளிக்கிறது. படிப்புக் கட்டணத்தில் முக்காற் பங்கைக் கம்பெனியே கொடுக்கிறது. தொழிலாளர் பள்ளிக்கூடத்திலாவது கல்லூரியிலாவது தொழிற் பாடசாலையிலாவது படிக்கலாம்.

நல்ல மனைவியை விட உயர்ந்த வரமும் இல்லை. பொல்லாத மனைவியைவிடப் பயங்கரமான சாபமும் இல்லை.

—ஸைமன் பீஸ்.

போன் நெ. 85206. தந்தி: "AKILAM"



ஸ்ரீ ஜெயபாரதம் பிரம்பு நாற்காலிகள் பல் வருடங்களாக நாணயமாகவும், நயமாகவும், அழகாகவும், முதல் தரமான பிரம்பினாலும், ஊக்கமான உழைப்பினாலும், பொருத்தமான அளவினாலும், கண்ணைக் கவரும் பல ரக எனாமல் வர்ணங்களுடன் தங்கள் அழகான பங்களா, கார்டன், கிளப், ஆபீஸ், சினிமா, ஸ்டுடியோ முதலிய இடங்களுக்கு தங்கள் மனத்திருப்திக்கு ஏற்றவாறு தயாரித்துக் கொடுத்துவருகிறோம்.

★

காட்லாக் வேண்டுவோருக்கு இலவசமாக அனுப்பிவைக்கப்படும்.

ஸ்ரீ ஜெயபாரதம் & கம்பெனி.

(ரிஜிஸ்டர்ட் நெ. 174558)

182, ராயப்பேட்டை ஹைரோட்,

சென்னை-14.

நாட்டுச் செக்கு தொழிலின் கஷ்டங்கள்

தமிழ் நாட்டில் நாட்டுச் செக்குத் தொழில் ஆயிரக் கணக்கான ஆண்டுகளாக நடந்துவரக்கூடிய பரிசுத்தமான குடிசைத்தொழிலாகும். நாட்டுச் செக்கு எண்ணெய் உற்பத்தி செய்யும் முறையான குடிசைத் தொழிலை ஒழித்துக் கட்டும் நோக்கத்துடன் சென்ற 30 ஆண்டுகளாக இயந்திர செக்கு முறைகள் புகுத்தப்பட்டு இக் குடிசைத் தொழில் நசித்து வருவதை யாவரும் அறிவார்கள். ஆனல் தமிழ் நாட்டு மக்களின் அபிமானத்தாலும், நமது அரசாங்கத்தாரின் ஆதரவுடனும் இத்தொழில் ஓரளவு தாக்குப்பிடித்து நிற்கிறது.

சென்னை மாநிலத்தில் சுமார் 10000 நாட்டுச்செக்குகள் உள்ளன. இத் தொழில் செய்யும் லட்சக் கணக்கான மக்கள் இதை நம்பியே வாழ்க்கை நடத்துகின்றனர். ரோட்டரி, எக்ஸ் பில்லருடன் போட்டியிட வேண்டியிருப்பதால் நாட்டுச் செக்கு எண்ணெய்க்கு விற்பனை வரி கிடையாது என்று 1953 ம் ஆண்டு முதல் சென்னை அரசாங்கம் உத்தரவிட்டு இருக்கிறது. இந்த வரி விலக்கு அளித்ததால் சாகும் தருணத்தில் இருந்த நாட்டுச் செக்குத் தொழில் ஒருவாறு நிலைத்து நிற்கிறது.

நாட்டுச் செக்கு மூலம் எண்ணெய் உற்பத்தி செய்ய 10 படிக்கு 1க்கு கூலி ரூ. 2-8-0 ஆகிறது. இயந்திரத்தின் மூலம் உற்பத்தி செய்ய அதே 10 படிக்கு ஆட்டக்கூலி 3 அணு முதல் 7 அணு வரை தான் ஆகிறது. மேலும் நாட்டுச் செக்குகளில் மழைக் காலங்களில் உற்பத்தி தடைப் படுகிறது.

சமீபத்தில் சென்னை அரசாங்கம் நியமித்த டாக்டர் லோகனுதன் அவர்களின் சிபார்சின் அடிப்படையில் எங்களுக்குப் புதிதாக விற்பனை வரியை ஏற்படுத்தும் அபாயம் இருக்கிறது. இந்த அபாயத்தைப் போக்க தமிழ் நாட்டு நாட்டுச் செக்கு எண்ணெய் உற்பத்தியாளர் சங்கம் கீழ்கண்ட நடவடிக்கைகளை எடுத்துக் கொண்டிருக்கிறது.

அமைச்சரிடம் தூது

தமிழ்நாடு பூராவிலிருந்தும் பிரதிநிதிகள் சென்று சென்ற மார்ச்சு மாதம் தொழில் மந்திரி அவர்களைச் சந்தித்து, குறைகளை எடுத்துக் கூறியுள்ளனர். தமிழ் நாட்டிலிருந்து எல்லா செக்கு உற்பத்தியாளர்களும் சுமார் 500 க்கு அதிகமான தந்திகளையும் மகஜர்களையும் கனம் அமைச்சருக்கு அனுப்பி, புதிய வரி விதிக்கக் கூடாது என்று கேட்டுக்கொண்டுள்ளனர்.

விற்பனை வரி மசோதா பொறுக்குக் கமிட்டி உறுப்பினர்களை நேரில் சந்தித்து, குறைகளைச் சங்கம் எடுத்துச் சொல்லி இருக்கிறது. அக் கமிட்டி உறுப்பினர்களும் ஆவன செய்வதாகவாக்களித்துள்ளனர்.

தமிழ் நாட்டிலேயே அகில இந்தியக் காதி கமிஷனல் வழங்கப்படும் 'ரிபேட்' நாட்டுச்செக்கு எண்ணெய்க்கு 1 பவுண்டுக்கு 3 பைசாவாக இருப்பதை 6 பைசாவாக உயர்த்த வேண்டும் என்றுகேட்டுக்கொண்டோம். கமிஷனரோ 2 பைசாவாகக் குறைத்து விட்டார்! இப் பிரச்சனையை, காதி கமிஷன் மீண்டும் பரிசீலனை செய்து, மீண்டும் நாட்டுச் செக்கு எண்ணெய்க்கு 'ரிபேட்' உயர்த்தும்படி வற்புறுத்தி மனுக்களும் கோரிக்கைகளும் அனுப்பப் பட்டுள்ளன.

மத்திய அரசாங்கத்தாரும் மாநில அரசாங்கத்தாரும் இரண்டாவது 5 ஆண்டுத் திட்டத்திலேயே இத் தொழிலை(நாட்டு செக்கு)அபிவிருத்தி செய்வதற்காக வேண்டி பல கோடிக் கணக்கான ரூபாய்களை ஒதுக்கியுள்ளனர். ஆனல் ஏட்டளவில்மட்டும் இது இருக்கிறதேதவிர, நடைமுறையில் இந்தத் தொழிலில் ஈடுபட்டுள்ளவர்களுக்கு மேற்படி திட்டத்தில் ஒதுக்கப்பட்டுள்ள பொருளாதார வசதிகளும், மற்ற வசதிகளும், பிரயோசனப்படுவதாகத் தெரியவில்லை.

அகில இந்தியக்காதிகமிஷன் ஒற்றை மாட்டுச் செக்குகளுக்காக சில வசதிகளைக் கொடுத்து வந்துள்ளது. அதே மாதிரி, பிரதேச வாரியான இரட்டை மாட்டுச் செக்குகளுக்கும் மேற்படிச் சலுகைகளை கொடுக்கவேண்டும் என்று கமிஷனை வற்புறுத்திய தின் பேரில்அவர்களும்

கொள்கையளவில் ஒத்துக் கொண்டுள்ளனர்.

ராஜ்ய சர்க்கார் இத்தொழிலுக்காக மத்திய சர்க்காரிடமிருந்தும் ஏராளமான பணத்தை கோட்டா'வாக வாங்கியுள்ளனர். அப்பணத்தைக் கூட்டுறவு நாட்டுச்செக்கு சொஸைட்டிகளுக்கு ஓரளவு உதவியுள்ளனர். ஆனால் ஒரு கூட்டுறவு சொஸைட்டியை இயங்க வைக்கும் பொருட்டு சர்க்காரின் அங்கீகாரம்பெறச்சுமார் 1½ ஆண்டு காலம் கடந்து போவதினால் சகல பகுதி மக்களும் கூட்டுறவுப் பிடியிலிருந்து விடுபட சர்க்காரிடம் விண்ணப்பித்துள்ளோம்.

கூட்டுறவாளர்களுக்கான சலுகைகளும் தனி நபர்களுக்கு கிடைப்பதற்கும், கூட்டுறவு நடைமுறையை இலகு வாக்கி; தொழில், மூலதன உதவிகளுக்கும் மாநில அரசாங்கம் ஆவன செய்ய வேண்டுமாய்க் கேட்டுக் கொள்கிறோம்.

மாங்காய் தொக்கு ஏற்றுமதி

தொக்கு வகைகளின் ஏற்றுமதியைப் பெருக்குவதற்கு இந்திய சர்க்காரும், அத்தொழிலில் ஈடுபட்டிருப்பவர்களும் தீவிர நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று யூனியன் உணவு விவசாய இலாகாவைச் சேர்ந்த விற்பனை-சோதனை டைரக்டர் காரியாலயம்,"இந்தியாவில் தொக்கு வகைகள் தயாரிப்புத் தொழில்" பற்றித் தயாரித்துள்ளதொருஅறிக்கையில் சிபாரிசு செய்திருக்கிறது.

இந்தியாவில் மாங்காய்கள் மட்டிலுமிருந்து 700 டன் தொக்கு தயாரிக்கப்படுகிறதென்று மதிப்பிடபபட்டிருக்கிறது; அதில் 82 சதவிகிதம் பிரிட்டன், அமெரிக்கா, மலேயா, கானடா ஆகிய நாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப் படுகிறது.

தொக்கு வகைகளில் இனிப்பு, காரம், காஷ்மீர், வங்காளம் ஆகிய ரகத் தொக்கு வகைகளுக்கு வெளிநாடுகளில் நல்ல கிராக்கி இருக்கிறது. இவை முக்கியமாக கல்கத்தா, பம்பாய், சென்னை, பங்களூர் ஆகிய இடங்களில் தயாரிக்கப்படுகிறது.

Are you interested in purchasing Iron, Steel and Tin products such as Buckets, Fire Buckets, Sals, Pots, Drums, Suitcases, Bath - Tubs, Watering Cans, any kind of tin containers, etc. etc?

THEN WE OFFER OUR SERVICE TO YOU.

We are confident that our long experience in the manufacture of these and other allied products and supply against the orders of the Southern Railway and the Ministry of works. Housing & Supply will stand us in good stead to fulfil your valuable orders quickly.

PLEASE ADDRESS YOUR ENQUIRIES TO :

P. K. GOVINDASWAMY

(ESTD. 1944)

GOVT. APPROVED IRON & STEEL GOODS FABRICATOR.

46, Walltax Road, Madras-3.

The House for EFFICIENCY, SATISFACTION & PROMPTITUDE.

Grams: "IRONFABRIC", MADRAS

அத்தான் இருந்தால்—?

★

மாலைக்கதிரவனும் மலைவாயில் வீழ்ந்து விட்டான்;
மங்காத தண்ணிலவு இல்லாத இருள்வேளை;
வேலைதனை விண்மீன்கள் விட்டனவோ! என்றெண்ண;
விண்மீன்கள் விண்ணிலில்லை; என்கண்ணில் தோன்ற [வில்லை;
சாலைவெளி மரங்கள் சாமப்பேய் எனவிளங்க;
சாந்தியெனும் அமைதி சற்றும் குறையவில்லை;
வாலைப்பெண் எண்ணமெலாம் வாலிபா! உன்றன்மேல்
வாடுமுகமலர, அத்தான்நீ இங்கிருந்தால் என்னும்!

* * * *

"கொல்லையின்கண் உள்ளதது முல்லைப்பூ நின்னுடைய
பல்லைத்தான் விளக்கிடுதே பைங்கொடியே! அஞ்சுகமே!
அல்லைத்தான் உன்கூந்தல் அபகரித்துக் கொண்டதுவோ
அரும்பு காந்தாளம் அழகுவிரல் ஆனதுவோ!
தொல்லைசூழ் இவ்வுலகில் உன்னால் இருக்கின்றேன்!
இல்லையேல் இல்லைநான், ஏந்திழையே! பொற்கொடியே!"
எல்லையற்று இவ்வாறு எல்லாம் என்னையே
இகழ்ந்திலாய், அத்தான் நீ இங்கிருந்தால் என்னும்!

* * * *

திங்களென்பாய் என்முகத்தை; தென்றலென்பாய் என்நடையை
திரித்துநீ கூறுவதெல்லாம் தேனாய் இனித்திடுமே!
அங்கத்தை அழிக்கும் ஆயுதமோ! அங்கயற்கண்;
அணங்கேநீ என்னெண்ணத்தை அளப்பதேன்? என்பாய்;
பங்கம் சிறிதில்லையடி பாவாய் உன்மேனியிலே!
பார்க்கு மிடமெலாம் பளிங்குபோல் தோன்றுதென்பாய்;
குங்கும மிட்டுக் குளித்திருக்கு மிவ்வேளை
கூடிக்குலவ, அத்தான்நீ இங்கிருந்தால் என்னும்!

* * * *

தண்ணீர் நிறைந்த தடாகத்தில் மீன்கூட்டம்
தன்வாய் திறந்து வண்ணச் செதிலாட்டி
வெண்ணப்பம் உண்ணவரும் வேகமாய்; அவ்விதமே
விண்மீன்கள் கூட்டமும் வெண்மதியைச் சூழ்ந்திருக்க,
எண்ணம் பலஎண்ணி எழுந்திரா வண்ணம்
எழில் வானம் நோக்கியே படுத்திருந்தேன்;
கண்ணிலும் மேலான காதல்—கதை
கழற, அத்தான்நீ இங்கிருந்தால் என்னும்!

—ச. இரவிநாதன்.

An opportunity will be more convincing

FOR

Steel Structural Fabrications,

Gates, Grilles, Storage Tanks,

Ferrous & non-ferrous Castings.

CONTACT :

BUILDERS INDUSTRIES,

MECHANICAL & STRUCTURAL ENGINEERS

IRON & BRASS FOUNDERS,

33, WALLTAX ROAD, MADRAS-3.

திண்டுக்கல்லில்

நம்பிக்கையான, தங்கம், வெள்ளி,

வைர நகைகள் வாங்குவதற்குச் சிறந்த இடம்

எதிர்பாருங்கள் !

வைர மாளிகை

உரிமையாளர் :

A. M. துரைராஜ் பிள்ளை.

மெயின் ரோடு,

திண்டுக்கல்.

சென்னை ராஜ்ய இரும்பு, எஃகு சாமான் உற்பத்தியாளர் மகாநாட்டுத் தீர்மானங்கள்

இரும்பு எஃகு பொருள் தயாரிப்பாளர்கள், தங்களுக்குத் தற்சமயம் ஒதுக்கப்படும் மூலப்பொருள்களின் அடிப்படையிலேயே குடும்பம் நடத்த வேண்டியிருப்பதால், தற்போது அமுலிலுள்ள கால்வருட பங்கீட்டளவை ஒவ்வொருவருக்கும் குறைந்தபக்ஷம் ஐந்து டன் என நிர்ணயிக்குமாறு ராஜ்ய சர்க்காரை இம்மாநாடு கேட்டுக்கொள்கிறது.

நம் ராஜ்யத்திற்கு ஒதுக்கப்படும் இரும்பு எஃகின் அளவை உயர்த்துமாறு பல முறை விண்ணப்பித்தும், நம் தேசத்தில் உற்பத்தியாகும் இரும்பு எஃகின் அளவைக் காட்டி, மத்திய சர்க்கார், உயர்த்த மறுத்து வருகிறார்கள். இத்துறையில் மீண்டும் முயற்சிக்குமாறு ராஜ்ய சர்க்காரை இம்மாநாடு கேட்டுக் கொள்கிறது.

நம் ராஜ்யத்திலுள்ள பெரிய கம்பெனிகளிலும் ரயில்வே, தந்தி, போர்ட் ட்ரஸ்ட், பொதுப்பணித் துறை மின்சாரம் முதலிய சர்க்கார் இலாகாக்களிலும் சேரும் ஸ்க்ராப் இரும்புகளை கன்ட்ரோல் விலையில், சங்கத்திற்கு ஒதுக்குமாறு ராஜ்ய சர்க்காரை இம்மாநாடு கேட்டுக்கொள்கிறது.

இரும்பு எஃகு பொருள் தயாரிப்பாளரை, விவசாயக் கருவிகள் தயாரிப்பவர்கள், அவை அல்லாதவற்றைத் தயாரிப்பவர்கள் என இரு பிரிவுகளாக்கி மூலப்பொருள்கள் சர்க்காரால் ஒதுக்கப்படுகின்றன. விவசாயக் கருவிகள் அல்லாதவற்றைத் தயாரிக்கும் பேப்ரிகேட்டர்களும் மண்வெட்டி, ஏற்றசால், கலப்பை, குடம், தோண்டி, கடப்பாறை முதலிய பொருள்களைத் தயாரிக்கின்றனர். ஆகவே விவசாயக் கருவி தயாரிப்பாளர்களுக்கு ஒதுக்கப்பட்டுள்ள எஃகு கோட்டாவில் 50 சதவிகிதத்தைபேப்ரிகேட்டர்களின் கோட்டாவுடன் சேர்க்குமாறு மத்ய, ராஜ்ய சர்க்கார்களை இம்மாநாடு கேட்டுக் கொள்வதுடன், இதற்காக மத்ய சர்க்காரை அணுக ஒரு கமிட்டியை அமைத்தேனும் முயற்சிக்குமாறு கனம்தொழிலமைச்சர், முதலமைச்சர் ஆகியோரை இம் மாநாடு கேட்டுக் கொள்கிறது.

டின் பிளேட், பி. ஸி. ஆர். ஸி. ஏ மற்றும் இரும்பு எஃகு மூலப் பொருள்களை இறக்குமதி செய்ய ஏற்பாடு செய்யுமாறும் ரிஜிஸ்டர்டு ஸ்டாக் ஹோல்டர்களுக்கு வரும் மூலப் பொருள்களுக்கு உடனுக்குடன் பர்மிட் வழங்க ஏற்பாடுசெய்வதுடன், டிபெக்டிவ் இரும்பில் தயாரிக்கப்படும் சரக்குகளின் அடக்க விலை குறைந்து டிை சரக்குகளை மக்களுக்கு குறைந்த விலையில் கொடுக்க ஏதுவாகுமாதலால் டிைடிபெக்டிவ் இரும்பு ரகங்களை ஸ்பெஷல் அலாட்மெண்ட்டாக கொடுக்குமாறும், இவற்றை வேகன் அலாட்மெண்ட்டாக சங்கத்தின் மூலம் பெற ஏற்பாடு செய்யுமாறும் ராஜ்ய சர்க்காரை இம் மாநாடு கேட்டுக்கொள்கிறது.

சிறு, குடிசைத் தொழில் முறையில் கைவேலையினாலேயே தயாரிக்கப்படும் இரும்பு எஃகுப் பொருள்களின் விற்பனைக்கு விற்பனை வரி விதிப்பினின்றும் பூரண நிரந்தர விதிவிலக்களிக்கும்படி இதற்கு முன் கோரியதையும், டாக்டர் பி. எஸ். லோகநாதன் முன் சாட்சியமளித்த போது விளக்கியபடியும், பேப்ரிகேட்டர்களால் தயாரிக்கப்பட்டு விற்பனை செய்யப்படும் பொருள்களுக்கு பூரண நிரந்தர வரி விலக்கு அளிக்கும்படியும் ராஜ்ய சர்க்காரை இம்மாநாடு கேட்டுக் கொள்கிறது.

பேப்ரிகேட்டர்களில்பெரும்பாலோர் இங்கிலீஷ் தெரியாதவர்கள் ஆதலால் அவர்களுடன் ராஜ்ய சர்க்கார் செய்யும் கடிதப் போக்குவரத்துக்களை தமிழிலேயே செய்யவேண்டுமென ராஜ்ய சர்க்காரை இம் மாநாடு கேட்டுக்கொள்கிறது.

சிறு குடிசைத் தொழில் வளர்ச்சிக்கு ஆக்கமளிக்கும் முறையில் அங்கீகரிக்கப்பட்ட பேப்ரிகேட்டர்களின் நடைமுறை மூலதனத்திற்கு (Working Capital) ரூ. 5000/- வரை 10 ஆண்டு தவணையில், நபர் ஜாமீன் பேரில், சுலப நிபந்தனையில், காலதாமதமின்றி, கடன் வழங்க

ஏற்பாடு செய்யுமாறு ராஜ்ய சர்க்காரை இம் மாநாடு கேட்டுக் கொள்கிறது.

ஸ்டீல் டிரங்க் தயாரிப்பவர்கள் பெரும்பாலாக உபயோகிப்பதும், மற்ற பேப்ரிகேட்டர்களுக்கு ஓரளவு தேவைப்படுவதுமான H B Thin Scrap, 24G 26, 28 G, B. P. தகடுகள் மற்றும் இதர இரும்பு எஃகு மூலப் பொருள்களை பதிவு பெற்ற சங்கங்கள் மூலம், வேகன் அலாட்மெண்ட்டுகள் பெற ஏற்பர்டு செய்யுமாறு ராஜ்ய சர்க்காரை இம் மாநாடு கேட்டுக்கொள்கிறது.

பேப்ரிகேட்டர்களின் தொழில் தொடர்ந்து நடைபெற உதவும் வகையில், கும்பகோணம், காஞ்சீபுரம், திருச்செங்கோடு, மதுரை ஆகிய நகர்களில் பேப்ரிகேட்டர்களில் ஒருவரையே ஸ்க்ராப் டீலராக நியமிக்குமாறு ராஜ்ய சர்க்காரை இம் மாநாடுகேட்டுக் கொள்கிறது.

ராஜ்ய சர்க்காரின் சிறு தொழில் அபிவிருத்தித் திட்டம் வெற்றிகரமான முறையில் செயல்படுவதற்கு உதவியாகவும், தொழில் நுட்ப உதவி நிதி உதவி ஆகிய துறைகளில் ஆலோசனை பெறவும், ஜில்லா கலெக்டர், உதவி கைத்தொழில், வர்த்தக (Asst, D. I. C) டைரக்டர், அங்கீகரிக்கப்பட்ட பேப்ரிகேட்டர்களின் சங்கப் பிரதிநிதிகள் முதலியவர்களைக் கொண்ட "சிறுதொழில் ஆலோசனைக்கமிட்டி" கள் ஒவ்வொரு ஜில்லாவிலும் அமைக்கப்பட ஆவன செய்யுமாறு ராஜ்ய சர்க்காரை இம் மாநாடு கேட்டுக்கொள்கிறது.

கோட்டா சர்டிபிகேட்மூலம் மூலப்பொருள்கள் பெறுவதற்குரிய கஷ்டமான நடைமுறைகளை எளிதாக்கி, ஷீ சரக்குகள் துரித டெலிவரி கிடைக்க உடனடியாக ஆவன செய்யும்படி ராஜ்ய சர்க்காரை இம் மாநாடு கேட்டுக்கொள்கிறது.

வட ஆற்காடு ஜில்லாவிலுள்ளபேப்ரிகேட்டர்களுக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ள கோட்டாவின்படி பதிவுசெய்துள்ள மூலப்பொருள்களுக்குரிய பர்மிட்டுகள்வழங்கப்படுவதில்லை இக்குறையை உடனடியாக நிவர்த்திக்குமாறும், இனி இவ்விதகுறைகள் ஏற்படாதவாறும்; சுற்றறிக்கைகளை காலாகாலத்தில் அனுப்பிவைக்குமாறும் Addl. D.I.C. சென்னை துணை கைத்தொழில் வர்த்தக டைரக்டரை இம்மாநாடு கேட்டுக் கொள்கிறது.

ரிஜிஸ்டர்டு ஸ்டாக் ஹோல்டர்கள் பர்மிட் பேரில் விற்பனை செய்யும் சரக்குகளுக்கு சட்டப்படிக்குள்ள விலையும், விற்பனை வரியுமே வசூலிக்கிறார்களா வென்பதை ஒவ்வொரு மாதமும் சரிபார்க்க ஆவன செய்யும்படி ராஜ்ய சர்க்காரை இம்மாநாடு கேட்டுக் கொள்கிறது.

பேப்ரிகேட்டர்களுக்கும் இரும்பு திரணைக் கம்பிகள் தேவைப்படுவதால், கட்டிட வேலைகளுக்காக ஒதுக்கப்பட்டுள்ள மேற்படி கம்பிகள் 50 சதவிகிதத்தை பேப்ரிகேட்டர்களுக்கு ஒதுக்கும்படி துணை கைத்தொழில் வர்த்தக டைரக்டரை இம் மாநாடு கேட்டுக்கொள்கிறது.

பேப்ரிகேட்டர்கள் தம் தேவையைக் குறித்து துணை உதவி கைத்தொழில் வர்த்தகடைரக்டர்களிடம் செய்து கொள்ளும் விண்ணப்பங்கள் மீது துரிதநடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு சம்மந்தப்பட்ட அதிகாரிகளை இம் மாநாடு கேட்டுக் கொள்கிறது.

தனிப்பட்ட வேலைகளுக்கு கொடுக்கப்படும் ஸ்பெஷல் அல்லது அட்ஹாக் கோட்டாவை, நிர்ணயிக்கப்பட்டுள்ள கால்வருட கோட்டாவில் குறைக்காமல் இருக்க உத்தரவிடுமாறு ராஜ்ய சர்க்காரை இம்மாநாடு கேட்டுக் கொள்கிறது.

பேப்ரிகேட்டர்களுக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ள அளவுப்படி சரக்குகள் சரிவர சப்ளை செய்யப்படாமல், வருடாவருடம்கோட்டாப்பாக்கிகள்அதிகரித்துக்கொண்டே போகின்றன. மேற்படி கோட்டா பாக்கிகளை அந்த அந்த வருடத்துக்குள் சப்ளை செய்ய வேண்டுமென்றும் பழைய கோட்டா பாக்கிகளை காலக்கிரமத்தில் சப்ளை செய்ய வேண்டுமென்றும் ராஜ்ய சர்க்காரை இம்மாநாடு கேட்டு கொள்கிறது.

பேப்ரிகேட்டர்களை, விவசாயக் கருவிகள் தயாரிப்பவர்கள், அவை அல்லாத மற்றவற்றை தயாரிப்பவர்கள் என சர்க்கார் பிரிவினை செய்து மூலப் பொருள்களை ஒதுக்குவதால், விவசாயக் கருவிகள் தயாரிப்பவர்கள் நீங்கிய இதர பேப்ரிகேட்டர்கள் அனைவரையும், சங்கத்தில் அங்கத்தினராக சேர்த்துக் கொள்வதென இம்மாநாடு தீர்மானிக்கிறது.

அடைந்த சுதந்திரத்தை மற்றவர்களுக்கும் அளிக்க மறுப்பவன் அயோக்கியன் மட்டுமல்ல; களங்கம் படைத்தவனும் கூட.

—இங்கர்சால்

இலக்கியம் :

பெண் என்றால்......?

[சோ. கருணநிதி]

நாகரிகம் வளர்ந்து கொண்டே வருகிறது; பெண் ஆணாக வேண்டும் என்று விழைந்து அப்படியே ஆகிவிடுவதற்குக்கூட இன்றைய உலகில் சாதனங்கள் நிறைந்து காணப்படுகின்றன. நாகரிகச் சுழற்சியிலே முக்கியபாக மேற்றுச் சுழல்பவர்கள் பெண்களாய் தான் இருக்கின்றனர். இருபதாம் நூற்றாண்டில் வாழும் பெண்களின் நாகரிகப்போக்குக்கண்டு பண்பாட்டுத் தாய் கண்ணீர் உகுக்கின்றனள். அகமும் புறமும் போல் வளர வேண்டிய நாகரிகமும் பண்பாடும் இன்று திசைமாறிப் போவதுபோல் இருக்கிறது. இதுதான் பண்பாட்டை வளர்க்கும் முறையா?

ஒரு நாட்டின் பண்பாடு அந் நாட்டின் நாகரிகத்தைப் பொறுத்து இருக்கிறது என்கிறார் ஓர் ஆங்கிலக் கவிஞர். ஆனால் தமிழ் நாட்டில் வளர்ந்துவரும் நாகரிகம், உண்மையிலேயே பண்பாட்டை வளர்ப்பதற்கும் பாதுகாப்பதற்குமா பயன்படுகிறது? "பெண்ணிற் பெருந்தகையாவுள!" என்று பாடி பெருமை கொண்ட தமிழ் நாடு இன்று அத்தகைய பெண்டிரைக் காணுதல் அரிதாக அல்லவோ காணப்படுகிறது. தன்னையும்காத்துத் தன்னைக் கொண்டவனையும் காத்து வாழ்வதுதான் பெண்ணின் பெருமை என்கிறாரே வள்ளுவர்! அந்தப் பெருந்தகையின் கூற்றைப் பொய்யாக்க தற்காலப் பெண்டிர் பெரிதும் விழைகின்றனர். யாருக்கும் அடங்கி நடக்காத - சுதந்திர வாழ்வுவாழவிழையும் பெண்களைத் தான் இன்று மிகைப்பட காணுகின்றோம். யாரோ ஒருவருக்கு அடங்கி நடந்து அன்பு வாழ்க்கை வாழும் குணமும் எண்ணமும் ஒரு சிலருக்கே இருக்கின்றது. அப்படி வாழ எண்ணங் கொண்ட பெண்டிரே உலகில் வாழ்க்கை இன்பத்தை நுகருகின்றனர். ஆமாம்! பெண்களின், வாழ்வும், தாழ்வும் ஆண்களின் இதய பீடத்திலே தான் பதித்து வைக்கப்பட்டுள்ளன. இது இயற்கையே செய்துவிட்ட மாற்ற முடியாத ஒரு நியதி. இதில் இருந்து தப்பி சுதந்திர வாழ்வு நடத்துவேன் என்று வெறும் வீராப்புப் பேசிய பெண்கள் சிலர் தோல்வியையே தொட்டணைத்துக் கொண்டனர் என்பதை வரலாறு கூறுகின்றது. பெண்களின் மகிழ்ச்சியும் மன அமைதியும் அவர்கள் தம் கணவன்மார்களிடமே புதைந்து கிடக்கின்றது. இந்த உண்மையை வெகு அழகாக விவரிக்கிறார் ஒரு கவிஞர்.

அவனுக்கும் அவளுக்கும் திருமணம் நடந்து எத்தனை நாட்கள் ஆயிற்றோ தெரியவில்லை. அன்பென்னும் தோணியில் அறம் பொருள் என்ற துடுப்புக்கள்கொண்டு அவர்கள் வாழ்வு இனிதே ஓடிக் கொண்டிருக்கிறது. அவளுடைய அழகிலே மயங்கி அந்தப் பேரழகியைத் தன் இதயத்திலே வைத்து பூஜிக்கிறான் அந்த ஆணழகன். அவளோ அவனுக்குச் சேவைசெய்வதிலேதான் தன் வாழ்வின் இன்பம் இருக்கின்றது என்று பணி செய்து செய்து மகிழ்கிறாள். இந்தத் தலைவியின் இன்ப வாழ்க்கையைப்பற்றி பெற்றவளுக்கு என்ன தெரியும்? தனியாக விடப்பட்ட தன் மகளின் இல்லறம் எப்படி நடக்கிறதோ என்றகவலை நற்றாய்க்கு ஏற்படுகிறது. உடனே செவிலித் தாயை அழைத்து தன் மகள் வீடு சென்று அவளைப் பார்த்து விட்டு வரும்படி கூறுகிறாள். செவிலித் தாய் வந்த போதுதானா தலைவி அப்படி இருக்கவேண்டும்? வந்த சுவடு தெரியாமல் உள்ளத்தில் பொங்கி யெழும் மகிழ்ச்சியோடு நற்றாயிடம் வருகிறாள் அவள்.

"எப்படியடி இருக்கிறாள் என் மகள்?" என்று கேட்கிறாள் நற்றாய்.

"நான் போய் நம் தலைவியையும் தலைவனையும் பார்த்தேன்; அவர்களின் இல்லறம் இனிதே நடக்கின்றதம்மா" என்கிறாள் செவிலித் தாய்.

நற்றாயின் உள்ளம் அமைதி அடையவில்லை, "விபரமாய் சொல்லடி?" என்று ஆவலோடு கேட்கிறாள்.

"நான் அங்கு போயிருந்த போது நம் தலைவி தன் கணவனுக்கு உணவு படைத்து அதை அவன் உண்ணும் போது தெரிந்து கொண்டேன் அம்மா!"

நற்றாய்க்கு இப்போது கோபம் மிகுந்து விடுகிறது! "என்னடி உளறுகிறாய்! உணவு உண்ணுவதில் இருந்து எப்படியடி தெரிந்து கொண்டாய்?"

நம் தலைவி அடுக்களையில் உணவு எப்படி சமைத்தாள் தெரியுமா! தன் கணவன் சுவையாய் இருக்கிறது என்று அருந்த வேண்டுமே என்று அவள் ஆர்வத்தோடு உணவு சமைத்ததினால் அவள் அணிந்திருந்த ஆடை நெகிழ்ந்து போய் விட்டது; அதைச் சரிப்படுத்தவேண்டி தயிர் பிசைந்த கையோடு அவள் தன் ஆடையை இறுக்கி உடுத்தியதே ஓர் அழகாய் இருந்தது. குழம்பு தாளித்த போது ஏற்பட்ட நறும்புகை அவள் அஞ்சன விழிகள் இரண்டிலும் வழிந்தோடிக் கிடந்தது. நன்றாகத் துழாவிச் சமைத்த புளிக்குழம்பினை தன் கணவனுக்கு உணவோடு சேர்த்து உண்ணச் செய்தாள். அவனோ தன் மனைவியின் கையால் சமைத்த உணவை அருந்தும் போது இனிது! இனிது! என்று சொல்லியே அருந்தினான்.

தன் கணவனின் மகிழ்ச்சியிலே தன்னை மறந்து, நெஞ்சிலே இன்பம் வழிந்தோட, உதடுகளில் இளநகை இழைந்தோட கதவிடுக்கில் நின்று கொண்டு தனக்குக் கிடைத்த வாழ்வை எண்ணி எண்ணி மகிழ்ந்தாள், அம்மா, நம் தலைவி! அந்தக் காணக் கிடைக்காத காட்சியைக் கண்டுவிட்டுத் தான் இப்போது உங்களிடம் சொல்கிறேன்!" என்று சொல்லி முடிக்கிறாள். நற்றாயின் இதயம் அமைதி அடைகிறது."

முளிதயிர் பிசைந்த காந்தள் மென் விரல்
கழுவுறு கலிங்கம் கழாஅ துடீகக்
குவளையுண்கண் குய்ப்புகை கமழ்ந்
தான்றுழந் தட்ட தீம் புளிப்பாகர்
இனி தெனக் கணவ னுண்டலின்
நுண்ணி தின் மகிழ்ந்தன் றொண்ணு
தன்முகனே !

—குறுந்தொகை—*167*

இப்படியொரு அரிய காட்சியை குறுந்தொகை *167* வது பாட்டில் அமைத்துப் போயிருக்கிறார் கூடலூர் கிழார். பெண்களின் பெருமையும் அருமையும், அவர் தம் கணவன்மார்களின் மன மகிழ்ச்சியிலே தான் பொதிந்து கிடக்கின்றன என்ற கருத்தைத்தான் இந்தப்பாட்டில் அவர் வலியுறுத்துகிறார். ஆனால் தற்காலப்பெண்டிர், சமையலா? அடுக்களைப் பக்கமே போனது கிடையாதே என்று சொல்லிக் கொள்வதிலே தானே பெருமை கொள்கின்றனர்!

விளம்பர விகிதம்

ராப்பர் 4-வது பக்கம்	(இரண்டு கலர்)	100—0—0
,, ,,	(ஒரு கலர்)	75—0—0
ராப்பர் உள் பக்கம்		75—0—0
சாதாரண முழு பக்கம்		60—0—0
,, ½ பக்கம்		30—0—0
,, ¼ பக்கம்		20—0—0

காண்டிராக்ட் விளம்பரங்களுக்கு,

அட்வர்டைஸ்மெண்ட் மானேஜர்,

"தொழில்"

55, எடப்பாளையம் தெரு, சென்னை-3.

144848

ராசி பலன்

ஸி. வெங்கட்ராமன்

<table>
<tr><td>செ</td><td>கே
பு சு</td><td>சூ</td><td></td></tr>
<tr><td></td><td colspan="2" rowspan="2">1—6—58 முதல்
15—6—58 வரை
இராசி</td><td></td></tr>
<tr><td></td><td></td></tr>
<tr><td></td><td>சந்
சனி</td><td>வி
ராகு</td><td></td></tr>
</table>

மேஷம்

(அசுவனி பரணி கார்த்திகை ¼)

இந்த ராசிக்காரரை கவனிக்குமளவில் குரு பகவான் பலமாக இருக்கிறபடியால் திரேக சுகம், யாத்திரை, சுப சிலவு, பெரியோர், புதிய நண்பர்கள் சிநேகிதம் அவர்கள் மூலம் எதிர்பாராத வகையில் உதவி, சன்மானம் இவைகள் ஏற்படும். வார ஆரம்பம் இரண்டு தினம் சிக்கலான பலன்கள் உண்டாகும். வியாபாரிகளுக்கு பணம் கொடுக்கல் வாங்கல் இவைகளில் கோர்ட் விவகாரம், வீண் வழக்கு, துர் அதிர்ஷ்ட வசமாக ஏற்பட ஏதுவாகும். சினிமா, கார், விவசாயம், ஹேஷ்ய பேரம், சங்கீதம் ஈடுபடும் நேயர்களுக்கு வெளியூர் பிரயாணம் போகவர சவுகரியங்கள் கிடைக்கும். அதிக லாபம் கிடைக்காது. தொழில் ஜீவனம் செய்யும் நண்பர்களுக்கு இடம் மாருதல் உண்டாகும். கூடிய வரை முருகனை பிரார்த்தனை செய்தால் உபத்திரவம் ஏற்படாது. நல்ல நாட்கள்: 10, 11, i2, 13, 14.

ரிஷபம்

(கார்த்திகை ¾ ரோகிணி 1 மிருகஷீரிஷம் ½)

இந்த ராசிக்காரரை சிந்திக்குமளவில் செவ்வாய், குரு, ராகு பலமாக இருப்பதினால் வியாபாரம், சங்கீதம், மோட்டார் உத்யோகம், விவசாயம் செய்யும் நேயர்களுக்கு வருமானம் வெளி விவகாரங்களில் சாதகமான சுப விரயம் பிரயாணங்கள், புகழ் இவைகள் ஏற்படும். சில சமயம் பண விவகாரங்களில் கடன் வாங்கவும், திரும்ப நாணயத்தோடு கொடுத்துவிட தாமதம் இவை அசம்மாவிதமாக உண்டாகும். குடும்பத்தில் கலியாணம் வீடு, வாகனம் இவை வாங்க சிலவு செய்ய வரும். குடும்பத்தில் ஒற்றுமையோடு வாழ சில கலகம், பின்னணியில் விரோதம் கோர்ட்டு வழக்குகள் தொடரும். வாரத்தின் பின் இரண்டு நாள் மனக் கஷ்டம், சிக்கலான நாட்கள். பின்பாதியில் சகோதரர்கள் பெரியோர்கள் இவர்கள் ஆதரவினால் உதவி, நன்மைகள் கிடைக்கலாம். உடல் நிலையில் உஷ்ணம், கண் எரிச்சல் உண்டாகும். அதிர்ஷ்ட நாட்கள்: 9, 10, 11, 12. கெட்ட நாட்கள்: 3, 4.

மிதுனம்

(மிருகசீரிஷம் ½ திருவாதிரை புனர்பூசம் ¾)

இந்த ராசியாதிபன் புதன், குரு, சனி செவ்வாய் பலமாக இருப்பதினால் முதல் இரண்டு நாட்கள் அதிர்ஷ்ட தினங்களாக உல்லாசமாக, சந்தோஷமாகவும் இருந்துவரும். சினிமா, சங்கீதம், தொழில் செய்கிறவர்களுக்கு குரு பலமானபடியால், பணம், வாழ்க்கை உயர்ந்த நிலையில் அமைந்து வாழ வசதி, செவ்வாய் சனியும் பலமாக இருக்கிறது. சூரியன் 12-ம் வீட்டிலிருப்பதில் ஓரளவு புகழ்கீர்த்தியில், விவகாரங்களில் கோர்ட் வீண் வழக்கு, இவைகளால் பாதிக்க வரும். நட்பு, பகைமை விரோதம் கலந்தே அனுபவிக்கவரும். சுற்றத்தார்மூலம் அடிக்கடி கலகமும் சந்தேகமும் இடையே ஏற்படும். இதனால் கஷ்டங்கள் உண்டாகும். முடிவில் குரு, சனி பலமாக இருப்பதில் சகல கஷ்டமும் மறைந்து போகும். சுகமாக வாழவழிவரும். திசானுதன் பலஹீனமாக இருந்தால் கோச்சாரம் நல்லமாதிரியிருந்தாலும் கஷ்டம் மேன்மேலும் அடைந்தேவருவதற்கு ஏதுவாகும். நல்ல நாட்கள்,—1, 2, 3, 4, 12, 13. கெட்ட நாட்கள்:—5, 6, 7.

கடகம்

(புனர்பூசம் ¼ பூசம் 1 ஆயில்யம் 1)

இந்த ராசிக்காரர்களுக்கு அதிக கஷ்டத்திலிருந்த செவ்வாய் பகவான் புண்ய ராசிக்கு போனதில் சூரியன் 11-ம் வீட்டிலிருப்ப

தில் செய்யும் தொழில், உத்தியோகம், சங்கீதம், கார் ஈடுபடும் நண்பர்களுக்கு கூடுமான வரையில் சுகமும் கஷ்டமும் கலந்தே அனுபவிக்கவரும். சனி, குரு இவர்கள் அடிக்கடி பணம், ஜீவனம் வகைகளில் எதிர்பார்ப்பதை தாமதமாக ஒவ்வொருவழியிலும் பலனை செய்து வரும். குடும்ப ஒற்றுமை கொஞ்சம் பலஹீன கலகம் செய்து வைக்க ஏதுவாகும். ஆன போதிலும் சூரியன், செவ்வாய் இரண்டு கிரகங்கள் பலமாக இருப்பதினுல் எல்லாவகைகளிலும் நிர்வாகம் திறம் பட செய்யவரும். சிநேகம், பெரிய மனுஷர் விசுவாசம் அவர்களின் ஆதரவுஉண்டு. ஆயினும் நஷ்டமும் கலகமும் ஓய்ந்த பாடில்லே. சுகம் சவுகரியங்களில் ஓர் அம்சம் ஏற்றமும் தாழ்வுமிகுந்து சரியாக இருந்து முடிவில் சரிபோகும். நண்பர்கள் மூலம் விசேஷ நன்மைகள் அடையவரும். வெளி பிரயாணம்உண்டு. நல்ல நாட்கள் :—3, 4, 5, 6, 14, 15. கெட்ட நாட்கள்: 7, 8, 9.

சிம்மம்

(மகம் பூரம் உத்திரம் ¼)

இந்த ராசிக்காரர்களே பார்க்கும்நிலேமையில் சூரியன், ராசியாதிபன் தவிர மற்ற கிரகங்கள் சகலமும் சரியான வழியில் நல்ல பலன்களாகவே சொல்வதற்கு நியதியில்லே. வர்த்தகம், தொழில், சங்கீதம், சினிமா, விவசாயம் உத்தியோகம் செய்யும் நண்பர்களுக்கு சுகம் கஷ்டம் கலந்து கலந்து அனுபவிக்க நேரும். ஆனுல் புதிய சினேகிதம் கீழ்த்தரமான அடிமைகள் நட்பு ஏற்படும். அதனுல் மனக் கஷ்டம், பணக்கஷ்டம் இவைகள்சதா ஏற்படும். செவ்வாய், சனி, குரு இவர்களில் சரியானபடிக்கு சஞ்சாரம் செய்யாதபடியினுலும் நல்லவர்கள் கூட விரோதிகளாக மாறி விடவும் அளவிற்கு மேல் கம் உண்டாகும். சனி, செவ்வாய் இவர்களால் மானம், புகழ், கீர்த்தி எவைகளும் உண்டாகாது. கண்டத்திற்கு ஒப்பான கஷ்டம் இவைகள் ஏற்படும். திசாபுத்திகள் பலமாக இருக்கிறவர்களுக்கு சகலமும் சுகமும் சந்தோஷமும் கலந்து வரும். மன அமைதி வருது. நல்ல நாட்கள் : 4, 5, 6, 7, 8. கெட்ட நாட்கள்: 12, 13, 14.

கன்னி

(உத்திரம் ¾ அஸ்தம் கிருத்திகை ½)

இந்த ராசிக்காரர்களுக்கு முதல் இரண்டு நாட்கள் சந்திரன் சஞ்சரிக்கும் நிலேமையில் கொஞ்சம் சந்தோஷம், சுகம்இவைகள் கலந்து வாழ சரிபோகும். குரு, சனி பலமாக இருந்தாலும் இருவரும், வக்கிரகதியில் இருக்கிறபடியால் சாதகமான விசேஷ நற்பலன்களே எதிர்பார்க்க கொஞ்ச நாள் பொருத்திருக்கவேண்டியிருக்கிறது. ஆனுலும் சங்கீதம், வியாபாரம்,மோட்டார் ஸ்பெகுலேஷன் தொழில் செய்கிறவர்களுக்கு தற்சமயம் லாபகரமான தினங்களாக சொல்லலாம். ஆயினும் செவ்வாய்,மீனம் சப்தமமானகுரு வீட்டிலிருப்பதினுல் கொஞ்சம் பின்னணியில் கலசம், விரோதம் இருந்து வரும். குடும்பத்தில் சுபமான சிலவுகள் வெளியூர் பிரயாணங்கள் நேரிடும். குழந்தைகளுக்கு புதிய பட்டுவஸ்திரம் ஆபரணம் இவைகள் வாங்குதல் நேரிடும். நல்ல நாட்கள்: 1, 2, 7, 8, 9, கெட்ட நாட்கள்: 12, 13, 14.

துலாம்

(சித்திரை ½ சுவாதி 1 விசாகம் ¾)

இந்த ராசிக்காரருக்கு கிரக நிலேமை பார்க்கும் நிலேமையில் செவ்வாய் பலமாக குரு விட்டிலிருக்கிறபடியினுல் மற்ற கிரக நிலே சரியாக நிலேயாக அமையவில்லே. சுகமும் கஷ்டமும் கலந்துவந்தாலும், செவ்வாய் பலத்தினுல் சகல விவகாரங்களிலும் வெற்றிகரமாக வேலே முடிவுபெறும். சினிமா, சங்கீதம் தொழில் வர்த்தகம் இந்த நிலேயில் ஏற்படும் நண்பர்களுக்கு கஷ்டமும் சுகமும் கலந்து அனுபவிக்கவரும். சனியின் பலன்எந்த வழியில்பிரயத்தனப்பட்டு வெற்றிகாண எண்ணம் உண்டானுலும் தாமதமாக பலன்கள் ஏற்படும். குடும்பத்தில் கொஞ்சநாள் பிரிந்து வாழ ஏற்படும். திசாபுத்தி பலமாக இருந்தால் எல்லாம் சரியாகவே நல்ல பலன்களாக முடிவுபெறும் நல்ல நாட்கள்: 3, 5,10, 11, 12. கெட்ட நாட்கள்: 14, 15.

விருச்சிகம்

(விசாகம் ¼ அனுஷம் கேட்டை)

இந்த ராசிநாதன் பஞ்சமத்திலிருக்கிறபடியால் குரு, சனி சஞ்சாரம், சனி இல்லாதபடியினுல் தொழில், வர்த்தகம், உத்யோகம் சினிமா, சங்கீதம் செய்யும் இந்த ராசிக்காரர்களுக்கு லாபகரம், பணவருமானம் தொழில் எதிர்பார்த்து செய்யசரிவராது. கடன்வாங்கி திரும்பவும்குறிப்பிட்ட காலத்தில் கொடுத்து

நாணயமாக தொழில் செய்ய மந்தமாக இருக்கும். இந்தராசிக்காரர்களுக்கு நல்ல பிரபல யோகமாகவருவதற்கு கொஞ்சநாள் பொருத்திருக்கவேண்டும். எதிர்காலம்சுமூகமாகநல்ல பலன்களை அனுபவிக்க ஏதுவாகும். நல்ல நாட்கள்: 5, 6, 7, 12, 13.

தனுசு

(மூலம் பூராடம் உத்திராடம் ¼)

இந்த ராசிக்காரர்களுக்கு குரு, சூரியன் இவர்கள் பலமாக இருக்கிறபடியினல் வர்த்தகம், உத்யோகம், தொழில் சினிமா, சங்கீதம் ஈடுபட்டு செய்யும் நண்பர்களுக்கு புதிய நண்பர் விஸ்வாசம், அவர்களால் புதிய விவகாரங்களில் ஈடுபட்டு அதனல் அதிக வருமானம், வெளி வட்டாரங்களில் பிரயாணம் அதன் மூலம் செல்வாக்கு கீர்த்தி அன்னிய நாடு உல்லாசமாக போக்கு வரவுகள் திடும் பிரவேசமாக போகவர உண்டாகும். அதிகாரிகள் மூலம் சன்மானம் பட்டம் பரிசுகள் கிடைக்கலாம். வீடு வாகனம் மோட்டார் பிரயாணம், இவைகள் எதிர்பாராத வழியில் வரும். நல்ல நாட்கள்: 7, 8, 9, 11, 12. கெட்ட நாட்கள். 1, 2, 3.

மகரம்

(உத்திராடம் ¾ திருவோணம்1 அவிட்டம் ½)

இந்த ராசிக்காரர்களுக்கு தற்காலம் செவ்வாய், சனி பலமாக இருப்பதினல் வியாபாரம், உத்யோகம், தொழில் சினிமா, சங்கீதம் செய்யும் ராசிக்காரருக்கு வருமானம் புதிய வழியில்நண்பர்கள் சினேகிதம்உண்டு. அவர்கள் மூலம் நூதனமான வழியில் வர்த்தகம், ஆபரணங்கள், பொன் பூஷணதிகள் வாங்கவும் ஜவுளி பட்டு வஸ்திரம் கொள் முதல் செய்து அதிக லாபத்திற்கு விற்பனை செய்யவும் சவுகரியம் உண்டாகும். வெளியூர் பிரயாணங்கள் போக வரவும் ஏற்பாடுகள் உண்டாகும். நல்ல நாட்கள்: 1, 2, 9, 10, 11.

கும்பம்

(அவிட்டம் ½ சதயம் பூரட்டாதி ¾)

இந்த ராசிக்காரர்களுக்கு தற்சமயம் குரு சனி இவர்கள் பலமாக இருக்கிறபடியினல் அவரவர்கள் குடும்பத்தில் விசேஷ சுப சடங்குகள் சுமுகமாக நடந்தேரி வரும். கலியாணம், சீமந்தம் இவைகள் செய்து வைக்க இந்த ராசியாசியாதிபருக்கு வாய்புகள் உண்டாகும். சினிமா, சங்கீதம், வர்த்தகம், உத்யோகம் செய்யும் நண்பர்களுக்கு ஜீவனத்தில் பதவி உயர்வு, வருமானம் அதிகம். சினிமா புகழ் நடிகர்கட்கு வெளிவட்டாரப் பழக்கங்களில் வெளியூர் போகவும் அதிக வருமானம், வீடு, வாகனம், கட்டிடம்கட்ட இவைகள் ஏற்படும். மோட்டார் வாகனம் இவைகளால் வருமானம் வந்து அனுபவிக்கவும் சாதகமான சமயம் உண்டாகும். நல்ல நாட்கள்: 2, 3, 4, 5.

மீனம்

(பூரட்டாதி ¼ உத்திரட்டாதி ரேவதி)

இந்த ராசிக்காரர்களுக்கு இதுகாரும் 12-ம் வீட்டிலிருந்த செவ்வாய் ஜன்மத்தில் வந்திருக்ககிறபடியாலும் சூரியன் சஞ்சரிக்கும் சமயம் தெய்வீக அனுகூலமாக இருக்காது. பணம் வாங்கவும் அடிக்கடி திருப்பி கொடுத்து வாழ்க்கை தரம் சரிபோகும். சினிமா, சங்கீதம், வர்த்தகம், உத்யோகம் செய்யும் நண்பர்களுக்கும் ஹோஷ்ய பேரம் செய்கிறவர்களுக்கும் ஏற்ற தாழ்வு இருந்தபோதிலும் முடிவில் நல்ல லாபகரமாக வருவாய் ஏற்படும். புதிய சினேகிதம் திடும்பிரவேசமாக ஏற்படும். சுகமும் கஷ்டமும் கலந்து அனுபவிக்க வரும். கெடுதல் தொந்திரவு வராது. நல்ல நாட்கள். 3, 4, 5, 6, 7.

(28-ம் பக்கத் தொடர்ச்சி)

முத்துலட்சுமியும் சக்கைப் போடு போடுகின்றனர்! வீரப்பா நடிப்பில் புதுமை இல்லாவிட்டாலும் அடக்கம் இருக்கிறது. அகில இந்திய நடனமணிகள் இருவர் நாட்டியம் படத்துக்கே ஜீவநாடி! பத்மினியும் வைஜயந்தியும் ஆடும் போட்டி நடனம் எத்தனை முறை பார்த்தாலும் சலிக்காது! அவர்களது நடிப்பையும், நடனங்களையும் பார்க்கத்தான் வேண்டும்; வருணிக்க முடியாது! புறநானூற்றுக் காட்சியை நடன நாடகமாக அமைத்து அரிய போர்விருந்தே அளித்திருக்கிருர் திருவாசன். டைரக்ஷன் பொறுப்பு திரு. வாசனுடையது. அவரைப் புகழ்வது கற்கண்டு இனிக்கிறது என்பது போல்தான்!

வடநாட்டில் இருந்து இறக்குமதிசெய்யப்பட்ட இசையை இசைஅமைப்பாளர் அமைத்தும் ஒரு பாட்டும் மனதில் நிற்கவில்லை. ''ராஜாமகள் ரோஜாமலர்'' என்ற பாட்டு கேட்க இனிமையாக இருக்கிறது. வசனம் பொருட் செறிவுடன் அமைந்திருக்கிறது.

படப்பிடிப்பு கண்ணுக்கு இனிமையாக இருக்கிறது.

வஞ்சிக்கோட்டை வாலிபன் ஒரு சிறந்த பொழுது போக்குப்படம்..

—சோ. கு.

விமர்சனம் :

வஞ்சிக்கோட்டை வாலிபன்

உழைத்துக் களைத்துவரும் பாட்டாளிகளுக்கும், வாழ்க்கையில் உழன்று மனச் சோர்வுற்றிருப்பவர்கள் எல்லோருக்கும் மகிழ்ச்சியும், நல்ல பொழுது போக்கும் அளிப்பதே சினிமாவின் முக்கிய பணி; அவர்களுக்குக் கல்வி அறிவூட்டும் ஆசான் பணி சினிமா செய்ய வேண்டுவதில்லை என்ற கருத்துடையவர் ஜெமினி அதிபர் திருவாசன் அவர்கள். ஆனால் அவர் பட நிலயத்தில் உருவாகி, வெள்ளித் திரையில் ஆடிய படங்களின் பட்டியலைப் பார்த்தால் பொழுது போக்குக்கு மட்டுமின்றி கல்வியும், கலையும், மொழியும் பக்தியும் வளர்ந்தோங்குவதற்கு உதவும் சிறந்த படங்களை அவர் தயாரித்துள்ளது புலனாகும்.

கண்ணுக்கு விருந்தாக ஒரு சந்திரலேகா என்றால் புண்ணியம் தேடுவதற்கு ஒரு சக்கரதாரி. உலகியல் அறிவு பெற தாசிஅபரஞ்சி என்றால், தமிழ்க் கலை, மொழி, பண்பு ஓங்க ஒரு ஔவையார். இப்படி அடுக்கிக் கொண்டே போக முடியும்!

அண்மையில் திரையுலகில் வெற்றிக்கொடி நாட்டிவரும் வஞ்சிக்கோட்டை வாலிபன் கருத்துக்கும், கண்ணுக்கும் நல்விருந்து.

படவுலகில் ஒரு புரட்சிப் புயலை உருவாக்க வேண்டும் என்ற எண்ணத்தோடு படம் எடுத்தார்போலும்! படத்தின் ஆரம்பமே புயலில் ஆரம்பிக்கிறது! பாய்மரத்தில் ஏறி பாயைத் துண்டித்தவுடன் புயல் நின்றுவிடுமோ?

எடுத்த எடுப்பிலேயே ஜெமினி கணேசன் வருகிறார். படம் பூராவும் அவர் தான் வந்து ஜமாய்க்கிறார். வேண்டிய நடிப்பு அவருடையது.

கணேசனின் இதயத்தை இருவர் கவர்கின்றனர். வைஜயந்தி முதலிலும் பின்பு பத்மினியும்! கணேசனின் காதலைப் பெற அவர்கள் இருவரும் போட்டி போட்டுக் கொண்டு நடிக்கின்றனர்.

திவான் சொக்கலிங்க நாவலராக வருகிறார் திரு. டி. கே. ஷண்முகம்! ''வீட்டுக்கொரு பிள்ளை வேண்டும் நாட்டைக் காக்க'' என்று அவர் கேட்கும் போது நமக்கு உள்ளம் துள்ளுகிறது. வீர முழக்கம் செய்யும் அதே சண்முகந்தான் குருடனாகவும் நடிக்கிறார்! தத்ரூபமாய் இருக்கிறது அவர் நடிப்பு! எஸ். வி. சுப்பையாவுக்கு வாய்ப்பு அதிகமில்லை. தங்கவேலுவும்,

(தொடர்ச்சி 27-ம் பக்கம் பார்க்க)

Edited & Published by K. Perumal Udayar, 55, Edapalayam Street, Madras-3.
Printed by K. N. Thiruvengadam, at his Ananda Parvathi Press, 30, Edapalayam Street, Madras-3.